வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 22.03.2023 புதன்கிழமை | இதழ் :103 | பக்கங்கள் : 16

# தேசிய அரசாங்கம் அமைக்க ஜனாதிபதி இன்று அழைப்பு?

கொழும்பு, மார்ச் 22

தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்காக அதில் இணைந்து கொள்ளுமாறு எதிர்க் கட்சிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று புதன்கிழமை அழைப்பு விடுப்பார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. 15



## இலங்கை இனிமேல் வங்குரோத்து நாடல்ல!

### ஜனாதிபதி ரணில் உரை

கொழும்பு, மார்ச் 22

நாட்டின் கடன்களை மறுசீரமைப்பதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. வங்குரோத்து அடைந்த நாடு என்ற நிலை இலங்கைக்கு இனி இருக்காது என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அத்துடன், ஐ. எம். எவ்வுடனான ஒப்பந்தத்தை இன்று புதன்கிழமை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு கடன் வசதியை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் (ஐ. எம். எவ்.) நேற்று முன்தினம்அனுமதி வழங்கியது. இது 15



## ஐ. எம். எவ். கடன் பெற்றதற்கு வெடி கொளுத்தி மகிழ்ச்சி!

கொழும்பு, மார்ச் 22

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் இலங்கைக்கு கிடைத்ததை அடுத்து, தென்னிலங்கையில் வெடி கொளுத்தி மகிழ்ச்சி ஆரவாரம் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு - மருதானை, ஹற்றன் பகுதிகளிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் பட்டாசுகளை வெடித்து இவ்வாறு மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

"தற்போதைய அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடன் தொகையை பெற்றுக் கொடுப்பதற்கு 15

## கிழக்கில் தமிழரின் எதிரிகள் சிங்களவரல்ல முஸ்லிம்களே!

### கலையரசன் எம். பி. தெரிவிப்பு

மன்னார், மார்ச் 22

கிழக்கு மாகாணத்தில் எமது பிரதான எதிரி சிங்களவர்கள் அல்ல முஸ்லிம்களே என்று கூறியுள்ளார் இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் த. கலையரசன்.

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச சபையில் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பின்னணி கொண்ட ஐக்கிய தேசிய கூட்டமைப்பின் சின்னத்தில் இலங்கை தமிழரசு கட்சி போட்டியிடும் விவகாரம் தொடர்பாக தமிழரசு கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கருத்துரைத்தபோது 15



## ஊழல் தடுப்பு மூலமே இலங்கை மீளெழலாம்!

### ஐ. எம். எவ். பணிப்பாளர்

கொழும்பு, மார்ச் 22

இலங்கை எதிர்கொள்ளும் பெரும் பொருளாதார மந்த நிலையிலிருந்து மீள்வதற்கு வலுவான சீர்திருத்தங்கள் அவசியம் என்று சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஊழலுக்கு எதிரான சட்டத்தை மறுசீரமைப்பது உட்பட ஊழலை சமாளிக்கும் முயற்சிகள் 15

## வடமராட்சி கிழக்கில் விபத்து; தந்தை பலி; மகள் படுகாயம்!

வடமராட்சி, மார்ச் 22

மணல் ஏற்றி வந்த லொறி எதிரே வந்த மோட்டார் சைக்கிளை மோதியதில் அதில் பயணித்த தந்தை உயிரிழந்தார். மகள் படுகாயமடைந்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு குடத்தனையில் நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் இந்த விபத்து இடம் பெற்றது. இதில், வத்திராயன் தெற்கை சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான சின்னையா கணேசலிங்கம் (வயது 44) என்பவர் உயிரிழந்தார். அவரின் 21 வயது மகள் படுகாயமடைந்தார்.

மேலும், மருதங்கேணியிலிருந்து குடத்தனை நோக்கி பயணித்த மணல் ஏற்றிய 15

### நீரில் மூழ்கிய கிழக்கு இளைஞர்கள்

## ஒருவரின் சடலம் மீட்பு; மூவர் தேடப்படுகின்றனர்!


கல்முனை, மார்ச் 22

எல்லாவல நீர்வீழ்ச்சியில் குளித்தபோது நீரில் மூழ்கி காணாமல் போன கிழக்கின் நான்கு இளைஞர்களில் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது. ஏனைய மூன்று இளைஞர்களை தேடும் பணி தொடர்ந்து வருவதாக தெரிவிக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டம் கல்முனை, சாய்ந்தமருது பகுதிகளை சேர்ந்த 22, 23 வயது இளைஞர்களே 15

## தமிழ் இனப் படுகொலையை அங்கீகரிப்பது அவசியமானது!

### ஆஸி. பாராளுமன்றில் ஒலித்த குரல்!



சிட்னி, மார்ச் 22

இலங்கையில் நடந்த தமிழ் மக்கள் மீதான இனப்படு கொலையை அங்கீகரிப்பது அவசியம் என்று அவுஸ்திரேலியாவின் பாரளுமன்றத்தில் அதன் உறுப்பினர் லிடியா தோர்ப் நேற்று 15

## ஹஜ் யாத்திரை அனுமதி நேர்மையாக நடக்கும்!

### அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க

கொழும்பு, மார்ச் 22

நாட்டின் அனைத்து முஸ்லிம்களுக்கும் கட்சி வேறுபாடுகளின்றி அரசாங்கம் சேவைகளை வழங்கும். இதன்படி ஹஜ் யாத்திரைக்கான ஏற்பாடுகளை எவ்வித சிக்கல்களுமின்றி நேர்மையாக முன்னெடுக்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதற்காக, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் தனியான அலுவலகம் ஒன்று 15

## கடன்களின் நிலைத் தன்மை விரைவில் உறுதிப்படுத்தப்படும்!

### மத்திய வங்கி நம்பிக்கை

கொழும்பு, மார்ச் 22

சர்வதேச நாணய நிதிய பணிப்பாளர் சபையின் அனுமதியை அடுத்து 700 கோடி டொலர்களுக்கும் அதிகமான நிதியை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு இலங்கைக்கு கிட்டியிருப்பதாகத் தெரிவித்துள்ள இலங்கை மத்திய வங்கி, வெகுவிரைவில் நாட்டின் பொதுக்கடன்களின் நிலைத்தன்மை உறுதிப்படுத்தப்படும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதியுதவிச் செயல்திட்டத்தின்கீழ் 48 மாத காலத்தில் சுமார் 300 கோடி 15

## அடம்பன் விபத்தில் இளைஞர் மரணம்!

மன்னார், மார்ச் 22

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். மற்றோர் இளைஞரும் முதியவரும் படுகாயமடைந்து மருத்துமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மன்னாரின் அடம்பன் - 15

## இப்படியும் நடக்கிறது...!

அது எண்பதுகளில் நடைபெற்றது. யாழ்ப்பாணம் 'ஈழநாடு'வில் இந்த ஊர்க்குருவி பணியாற்றிக்கொண்டிருந்த காலம்.

ஓர் அரசியல் மேடையில் இந்த ஊர்க்குருவி ஏறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. கட்டாயம் என்பதைவிட நிர்ப்பந்தம் என்றுகூட சொல்லலாம்.

இதனை நேரில் பார்த்துக் கொண்டிருந்த ஒரு நண்பர், (அவர் ஊர்க்குருவிக்கு மிக நெருக்கமானவர்தான்) மறுநாள் நேராக வந்து ஆசிரியரிடம் 'போட்டுக் கொடுத்து' விட்டார்.

அப்போது 'ஈழநாடு'வில் அதுவும் ஆசிரியர் பீடத்தில் பணியாற்றுகின்ற எவரையும் அரசியலில் ஈடுபடவோ அதிகம் ஏன் அரசியல் கட்சியில் உறுப்பினராக இருக்கவோ அனுமதிப்பதில்லை. இப்போது நடுநிலை ஊடகம் என்றும் ஊடகப் போராளி எனவும் கூறிக்கொண்டு ஒரு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருக்கலாம் என்பது வேறு கதை.

அரசியல் கூட்டத்தில் பேசிய விடயத்தை நண்பர் போட்டுக் கொடுத்துவிட, அதனை அப்போது பதில் ஆசியரியராக இருந்தவர் உடனேயே முறைப்பாடாக எழுதி அப்போது பொது முகாமையாளராக இருந்த சீனிவாசகம் மாஸ்ரரிடம் கொடுத்து விட்டார்.

உடனே மாஸ்ரர், அவர் கொடுத்த புகார் கடிதத்திலேயே என்னிடம் விளக்கம் கேட்டு ஒரு குறிப்பை எழுதி எனக்கு அனுப்பி விட்டார்.

புகார் கொடுத்த நண்பருக்கு பிற்காலத்தில் என்னை நேருக்கு நேராக சந்திக்கவே முடியவில்லை. இது பழைய கதை. இனி இன்றைய பத்திக்கு வருவோம்.

நண்பர் ஒருவர் 'ஈழநாடு'வில் நேற்று முன்தினம் வெளிவந்த செய்தி ஒன்றின் 'ஸ்கிறீன் சொட்டை' அனுப்பி, மீண்டும் வீட்டுக்குள் செல்கிறதா குத்து விளக்கு? என்று கேட்டிருந்தார்.

தமிழரசு கட்சியின் மத்திய செயல்குழுக்கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணைந்து செயல்படுவது என்ற தீர்மானம் செய்தியாக வெளிவந்திருந்தது.

அந்தச் செய்தியை அனுப்பியே நண்பர் இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தார்.

அதை ஏன் எம்மிடம் கேட்டார் என்பது தெரியவில்லை. ஆனால், அவருக்கு ஒரு விடயம் மட்டும் புரியவில்லை என்பது தெரிந்தது. அவர் சாதாரண வாசகரல்ல. அவர் ஒரு மூத்த அரசியல் செயல்பாட்டாளர். லண்டனில் தமிழ் அரசியலில் முக்கிய பிரமுகர்.

அவர் அந்தச் செய்தியை எவ்வளவு தூரம் முக்கியமான ஒன்றாக எடுத்துக்கொண்டிருக்கிறார் என்பதை அறிந்தபோது ஆச்சரியம். மனுசனுக்கு அண்மைக்கால அரசியல் புரியவில்லை என்றும் எடுக்கமுடியாது. அப்படி நடக்கக்கூடாது என்று அவர் நினைக்கின்றாரோ என்றே எண்ணத் தோன்றியது.

தமிழரசின் மத்திய குழுக் கூட்டத்தில், சம்பந்தன் கொண்டு வந்திருந்த 'தனிநபர்' பிரேரணை ஒன்று ஏற்கனவே கூட்டத்தில் சற்று சலசலப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில் மாவையர் இந்தத் தீர்மானத்தை கொண்டு வந்திருந் தார். ஏற்கனவே இப்படியொரு தீர்மானத்தை கொண்டுவர விருப்பதாக ஊடக மாநாடு நடத்தி பகிரங்க அறிவிப்பு செய்து விட்டுத்தான் மாவையர் அதனை கூட்டத்தில் சமர்ப்பித்திருந்ததால் கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டே, உறுப்பினர்கள் அதனை ஏற்றுக் கொண்டிருப்பார்கள் என்பதை மனக்கண்ணில் பார்க்க முடிந்தது.

ஆனால், நடக்கவிருக்கும் உள்ளூராட்சி தேர்தலில் யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் தமிழரசு சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் தொடர்பாக சம்பந்தன் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்ததுடன், அது தொடர்பாக ஆராய்ந்து தனக்கு அறிக்கை தருவதற்காக குழு ஒன்றை நியமிக்கவேண்டும் என்றும் கோரியிருந்தமை - அந்தக் கூட்டத்தில் பலரும் எதிர்பார்க்காத ஒன்று. சம்பந்தன் சார்பில் அந்தக் கோரிக்கையை கொண்டு வந்தவரும் மாவைதான்.

கூட்டத்தில் நடைபெற்ற தகவல்களை மேலும் அறிந்து கொள்ளும் ஆவலில், ஒரு முக்கிய ஊடக நண்பருடன் தொடர்பு கொண்டேன்.

அவர் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளாவிட்டாலும் கூட்ட நிகழ்வுகளை பதிவுசெய்து 'றீ வைண்ட்' பண்ணி பார்ப்பது போல அனைத்தையும் சொல்லக் கூடியவர். பல தடவைகள் அவ்வாறு விடயங்களை வெளிச் சம்போட்டுக்காட்டியவர்.

அவர் கேட்டார், நமது அரசியலிலும் தேசிய அரசியலிலும் ஓர் ஒற்றுமை இருக்கிறது கவனித்தீர்களா? என்று.

எதனைச் சொல்கிறார் என்று யோசித்துக் கொண்டிருந்தபோது அவரே சொன்னார், 'மகிந்தர் நன்றாகத் தளர்ந்துவிட்டார். நாட்டில் நடப்பது எதுவும் அவருக்குப் புரிவதில்லை. ஆனாலும் அவரின் கட்சிக்காரர்கள் அவரை முன்னே நிறுத்தி அரசியல் செய்து கொண்டிருக்கிறார்கள். அவரின் இந்தத் தளர்ச்சியை ரணில் விக்கிரமசிங்க மிக அழகாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்.

அதுபோலத்தான் நமது அரசியலிலும் சம்பந்தர் மாத்திரமல்ல மாவையரும் நன்றாக தளர்ந்து விட்டனர். இந்தத் தளர்ச்சியை சுமந்திரன் போன்றவர்கள் நன்றாகப் பயன்படுத்திக்கொண்டு அரசியல் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

அப்போதுதான் சீனிவாசகம் மாஸ்ரர், முறைப்பாடு கொடுத்தவரின் கடிதத்திலேயே விளக்கம் கேட்டு எனக்கு அனுப்பி யது போல வேட்பாளர் தெரிவில் சம்பந்தப்பட்டவர்களையே அது பற்றி விசாரித்து அறிக்கை தரக் கேட்டிருக்கிறாரோ சம்பந்தர். அதனைத்தான் இவர் சொல்கிறாரோ என்ற கேள்வியே மனதில் எழுந்தது.

**- ஊர்க்குருவி**

# பாராளுமன்றத்தில் தனது சிறப்புரிமை மீறப்பட்டமைக்கு சிறிதரன் அதிருப்தி!

*கொழும்பு, மார்ச் 22*

பாராளுமன்றத்திலேயே தமது சிறப்புரிமை மீறப்பட்டுள்ள நிலையில் தமிழ் பேசும் மக்களுக்கான உரிமைகள் மறுக்கப்படுவது சாதாரண விடயம் என்று பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் தெரிவித்துள்ளார்.

சபையில் நேற்று தனது உரைக்கான அவகாசம் எந்த வித முன்னறிவித்தலும் இன்றி பின்தள்ளப்பட்டமை குறித்து அவர் தனது அதிருப்தியை முன்வைத்தார்.

அதேபோன்று தமிழ் மக்கள் வசிக்கும் பகுதிகளில் காணிகள் அபகரிக்கப்படும் சந்தர்ப்பங்களும் அதிகரித்து வருவதாக அவர் சுட்டிக் காட்டினார். (அ)

# வெளிநாட்டு வேலை முகவர்களுக்கான வங்கி பிணை தொகை அதிகரிப்பு

*கொழும்பு, மார்ச் 22*

வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையத்துக்கான அனுமதிப்பத்திர விநியோகத்திற்காக சமர்ப்பிக்கப்படும் வங்கி பிணைக்கான கட்டணம் 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயில் இருந்து 30 இலட்சம் ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் வருடத்துக்கு பின்னர் அதனை 50 இலட்சம் ரூபாய் வரை அதிகரிக்க எதிர்பார்ப்பதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முகவர் நிலையங்களூடாக வெளிநாடுகளுக்கு செல்வோருக்கான ஒப்பந்தத்துக்கு அமைய, அவர்களுக்கு கிடைக்க வேண்டிய சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் செலுத்தப்படாவிடின், அது குறித்து கிடைக்கும் முறைப்பாட்டுக்கு அமைய சம்பளத்தை பெற்றுக்கொடுப்பதற்கும், மேலதிக கட்டணங்களை அறவிடவும் தேவையான பணிப்புரைகள் விடுக்கப்பட்டுள்ளன என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான கட்டணங்களை குறித்த முகவர் நிலையங்கள் செலுத்தாவிடின், முகவர் நிலையங்களால் சமர்ப்பிக்கப்படும் வங்கி பிணை கட்டணத்திலிருந்து அதனை சட்ட ரீதியாக அறவிட முடியும் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, முகவர் நிலையங்களுக்கு கடுமையான ஒழுங்குபடுத்தல்களை அமுல்படுத்தவும் எதிர்பார்ப்பதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் சுட்டிக் காட்டியுள்ளது. (ஐ)

# களுத்துறை பாடசாலையில் மாணவர் ஒருவர் திடீர் மரணம்!

*கொழும்பு, மார்ச் 22*

களுத்துறை - பாணந்துறை பிரதேசத்தில் பாடசாலை மாணவர் ஒருவர் நேற்று பிற்பகல் திடீரென உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை வடக்கில் வசிக்கும் 16 வயதுடைய மாணவனே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த மாணவன் நண்பர்கள் குழுவுடன் விளையாடிக் கொண்டிருந்த போது உடல் நலக்குறைவு ஏற்பட்டு உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்த பாடசாலை மாணவர் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்தார் என்று விசாரணைகளில் தெரியவந்தது. (ஐ)

# டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி உயர்வு

*கொழும்பு, மார்ச் 22*

சர்வதேச நாணய நிதியத்தின் அறிவிப்பையடுத்து நேற்று அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி மீண்டும் உயர்வடைந்தது.

நாடு முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடியின் விளைவாக ஏற்பட்ட பணவீக்க அதிகரிப்பால் கடந்த காலங்களில் டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து சென்றது.

இருப்பினும் கடந்த வாரம் டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதியில் சடுதியான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டதுடன், ரூபாயின் பெறுமதி தொடர்ந்து அதிகரித்துச்சென்றது.

ஆனால், நேற்று முன்தினம் திங்கட்கிழமை மீண்டும் ரூபாயின் பெறுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டது. இதன்படி நேற்று முன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான ரூபாயின் கொள்வனவு பெறுமதி 331.71 ரூபாயாகவும், விற்பனைப் பெறுமதி 349.87 ரூபாயாகவும் பதிவாகியிருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் நீடிக்கப்பட்ட நிதியுதவி செயல்திட்டத்தின்கீழ் இலங்கைக்கு கடன் வழங்குவதாக ஐ. எம். எவ். இணக்கம் தெரிவித்தது.

இதன்படி, நேற்று செவ்வாய்கிழமை அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான ரூபாயின் கொள்வனவுப்பெறுமதி 316.84 ரூபாயாகவும், விற்பனைப் பெறுமதி 334.93 ரூபாயாகவும் பதிவானமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நெடுந்தீவில் மகா கும்பாபிஷேகம்

*யாழ்ப்பாணம், மார்ச் 22*

நெடுந்தீவு, மாவிலி இறங்குதுறையில் அமைந்த பழம்பெருமைமிக்க வீரபத்திர விநாயகர் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்க கிரியைகள் இன்று புதன்கிழமை ஆரம்பமாகின்றன.

மகா கும்பாபிஷேகம், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 7.50 மணிமுதல் 9.12 மணிவரையுள்ள மேட லக்கின சுப முகூர்த்தத்தில் நடைபெறுகிறது.

23ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை எண்ணைய்க் காப்பு நிகழும்.

'குருவம்ச சிகாமணி' ஊரெழு சிவஸ்ரீ சோ. வாகீஸ்வர குருக்கள் தலைமையில் இக் கும்பாபிஷேக கிரியைகள் இடம்பெறுகின்றன.

# சொற்பொழிவு

*யாழ்ப்பாணம், மார்ச் 15*

நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் வாராந்த சுக்கிரவார சிறப்பு சொற்பொழிவு ஆலயத்தின் சண்முக விலாச மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கத்தின் தலைமை உரையைத் தொடர்ந்து, சிறப்பு சொற் பொழிவை சைவப்புலவர் சி. கா. கமலநாதன் “தெரி தமிழை உதவு சங்கப்புலவோன்“ என்னும் தலைப்பில் ஆற்றுவார்.

சொற்பொழிவின் இறுதியில் மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
22.03.2023 புதன்கிழமை
பிலவ வருடம், பங்குனி 08

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சம்பந்தனின் கோரிக்கை?

சம்பந்தன் இதுவரையில் பலவாறான கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றார். அவைகள் அனைத்துமே தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பானவை. ஆனால், முதன்முதலாக தான் சார்ந்த தமிழரசு கட்சிக்குள் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பாக அறிக்கை தருமாறு கோரிக்கை முன்வைத்திருக்கின்றார். அதாவது, உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்பாளர்கள் தெரிவின்போது, திருகோணமலையிலும் யாழ்ப்பாணத்திலும் மோசடிகள் இடம்பெற்றிருக்கின்றன எனவும் அதனை ஆராய்வதற்கு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்றும் தமிழரசு கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. திருகோணமலை சம்பந்தனின் மாவட்டமாகும். இந்த மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சியின் முக்கியஸ்தர்களும் குறித்த கூட்டத்தில் பங்குகொண்டிருந்தனர்.

தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் ஒருவர் கட்சிக்குள் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோருகின்றார் என்றால் – அதனை ஆராய்வதற்கு குழுக்கள் நியமிக்கப்படுகின்றன என்றால் – தமிழரசு கட்சியின் பலவீனமான நிலைமையை இனியும் மறைக்க முடியாது. நிலைமை மோசமடைந்து செல்கின்றது. தமிழரசு கட்சி மோசமான உட்சிக்கல்களுக்குள் சிக்குப்பட்டிருக்கின்றது. சம்பந்தனின் கோரிக்கை இதனை அம்பலப்படுத்தியிருக்கின்றது.

2020இல் இடம்பெற்ற பாராளுமன்ற தேர்தலில் இருந்தே தமிழரசு கட்சியின் உள் முரண்பாடுகள் அம்பலமாகின. தேர்தலின்போது சுமந்திரன் அணி, மாவை அணியென இரண்டு அணிகள் மோதிக்கொண்டன. சுமந்திரனின் தோல்வியை வெளியிலுள்ளவர்களை விடவும் தமிழரசு கட்சியின் ஒரு குறித்த அணியே அதிகம் விரும்பியது. இறுதியில் மாவை சேனாதிராசா தோல்விடைந்தார். தேர்தல் பிரசாரங்களின்போதும் தேர்தல் முடிவடைந்த பின்னரும் இந்த விடயங்கள் பொது வெளிகளில் விவாதிக்கப்பட்டன.

இப்போதும் தமிழரசு கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களில் ஒருவரான சட்டத்தரணி தவராசா, சுமந்திரனின் செயல்பாடுகளை அவ்வப்போது விமர்சித்து வருகின்றார். அதனைத் தடுப்பதற்கு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவால் முடியவில்லை. இவ்வாறானதொரு நிலையில், சம்பந்தனே திருகோணமலையிலும் யாழ்ப்பாணத்திலும் வேட்பாளர் தெரிவின்போது மோசடிகள் இடம்பெற்றிருக்கின்றன என்று கூறியிருப்பதானது, கட்சிக்குள் சம்பந்தன் அணி – சம்பந்தனுக்கு எதிரான அணியென்று ஒரு புதிய குழப்பம் ஏற்பட்டிருப்பதை வெளிக்கொண்டு வந்திருக்கின்றது. அவ்வாறில்லையென்று கட்சியினர் வாதிடலாம். ஆனால், பின்னர் எதற்காக சம்பந்தன் இவ்வாறானதொரு கோரிக்கையை முன்வைக்க வேண்டும்? எதற்காக பிரச்னையை ஆராய்வதற்காக குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும்?

சம்பந்தனின் இயங்க முடியாத நிலையிருப்பதால் அவரின் சொந்த மாவட்டத்தின் கட்சி பணிகளில்கூட அவரால் தலையீடு செய்ய முடியவில்லை. சம்பந்தன் இயங்கிய வேளையில், திருகோணமலையில் அனைத்துமே அவரின் தீர்மானத்துக்கு அமைவாகவே நடந்தது. அவரின்றி அணுவும் அசையாதென்பது போலவே விடயங்கள் இடம்பெற்றன. யாரை வேட்பாளராக நிமியக்க வேண்டும், நிமிக்கக்கூடாது, பங்காளிக் கட்சிகளுக்கு ஆசனம் வழங்குவதா அல்லது இல்லையா – அனைத்தும் அவராலேயே தீர்மானிக்கப்பட்டன. திருகோணமலை மட்டுமல்ல, திருகோணமலையில் கதிரையில் இருந்தவாறு தமிழரசு கட்சியின் அனைத்துத் தீர்மானங்களையும் அவரே முன்னெடுத்து வந்தார்.

திருகோணமலையில் 25 வருடங்களுக்கு மேல் வாழாத ஒருவரை திருகோணமலை தமிழரசு கட்சியின் தலைமைப் பொறுப்பில் அமர்த்தினார். சம்பந்தனின் தீர்மானங்களை கட்சியிலுள்ள எவருமே கேள்விக்குள்ளாக்க முற்படவில்லை. சி. வி. விக்னேஸ்வரனை வடக்கு மாகாண முதலமைச்சராக்க வேண்டும் என்பதற்காக கட்சியின் தலைவரான மாவை சேனாதிராசாவை செல்லாக் காசாக்கி – ஓரங்கட்டி – தான் விரும்பிய விக்னேஸ்வரனை முதலமைச்சராக்கினார். இவ்வாறு தான் விரும்பிய அனைத்தையுமே முன்னெடுத்து வந்த சம்பந்தனால் தற்போது கட்சிக்குள் தான் விரும்பும் சிறிய விடயத்தைக்கூட, முன்னெடுக்க முடியவில்லை. இவ்வாறானதொரு சூழலில்தான் தனது தீர்மானத்துக்கு மாறாக மோசடிகள் இடம்பெறுகின்ற என்று குற்றம்சாட்டியிருக்கின்றார்.

இதில் சம்பந்தன் சரியாக அல்லது கட்சியின் சார்பில் குறித்த மாவட்டங்களில் தீர்மானங்களை மேற்கொண்டவர்கள் சரியானவர்களா? இதுவல்ல இங்குள்ள பிரச்னை. தமிழரசு கட்சி அதன் இறங்குமுகத்தை எதிர்கொண்டிருக்கின்றதா என்பதுதான் கேள்வி? ஏனெனில், அண்மைக்காலமாக தமிழரசு கட்சி குழப்பங்களின் கட்சியாகவே வெளித்தெரிகின்றது. இதனை வெறுமனே தமிழரசு கட்சியின் பிரச்னையாக மட்டும் நோக்கக் கூடாது – மாறாக, தமிழர்களின் பேரம் பேசும் ஆற்றலை தக்கவைக்க வேண்டிய ஜனநாயக அரசியல் தொடர்ந்தும் எவ்வாறு பலவீனமடைந்து செல்கின்றது – என்பதே நாம் கருத்தில்கொள்ள வேண்டிய விடயமாகும். இது தற்செயலாக நடைபெறுகின்றதா அல்லது நன்கு திட்டமிட்டு தமிழர் அரசியல் சிதைக்கப்படுகின்றதா? இந்தச் சிதைவுக்கு ஒருவரை முதன்மையாக குற்றம்சாட்ட முடியுமென்றால் – அந்த முதல் குற்றவாளி சம்பந்தன்தான். ஏனெனில், சம்பந்தன் தனது அதிகார நலன்களைவிட வேறு ஒன்றையுமே கருத்தில்கொள்ளவில்லை.

# இம்மை மறுமை பயன்பெற மருதடியான் தாள் பணிவோம்!

**வரலாற்று பிரசித்தி பெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய கொடியேற்றம் இன்றாகும். இதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

சைவப்புலவர் எஸ். ரி. குமரன்

ஈழத் திருநாட்டில் விநாயகர் திருக்கோவில்களில் முதன்மை தலமாக விளங்குவது மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம். தமிழ் வேந்தர் காலத்துத் திருத்தலங்களில் ஒன்றாகப் போற்றப்படும் இந்தத் தலம் பற்றிய பல்வேறு ஐதீக வரலாறுகள் கூறப்படுகின்றன. அருள்சிறப்பும் அற்புதமும் நிறைந்த மருதடி விநாயகர் ஆலயம் தனியாரின் பராமரிப்பில் பராமரிக்கப்பட்டு சென்ற நூற்றாண்டில் பொதுக் கோவிலாகப் பிரகடனம் செய்யப்பட்டு பொதுமக்களால் தற்போது நிர்வகிக்கப்பட்டு வருகிறது. காலம் தவறாத பூசை, வழிபாட்டு ஒழுங்கு, திருப்பணி வேலைகள், அறநெறிப் பாடசாலை, ஆலய நிர்வாகம் என மிகவும் சிறப்பாக ஆலயம் சிறப்பாக நிர்வகிக்கப்படுகின்றது.


வரலாற்றுச் சிறப்பு மிக்க மருதடி விநாயகர் ஆலயத்தின் 2023ஆம் ஆண்டுக்கான வருடாந்த மகோற்சவம் இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 தினங்கள் பெருந் திருவிழா நடைபெற்றவுள்ளது. தமிழ் புது வருடப்பிறப்பு தினமான எதிர்வரும் ஏப்ரல் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவமாகும்.

மின்னும் மருதடி வாழ் வேழமுகன் றாள் பணிந்து
பன்னுவவன் காதை பகர்ந்திடவே - மன்னுபுகழ்
நீட்டு மலைமேல் றிகழ்பா ரதம்வரைந்த கோட்டுமுகன் பாதங் குறி

- என்று போற்றுகின்ற மருதடி விநாயகரின் அற்புதத்தைக் காண பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் பெருந்திருவிழா காலத்தில் எம்பெருமானின் சந்நிதானத்துக்கு அலை அலையாக திரண்டு வருவார்கள்.

ஆண்டு தோறும் சித்திரை மாதம் புதுவருடப் பிறப்பன்று பல்லாயிரக்கணக்கான பத்தர்கள் புடைசூழ விநாயகப் பெருமானின் இரதோற்சவத் திருவிழா மிகச்சிறப்பாக நடைபெறும். மகிமை மிக்க மருதடியான் திருவருளைப் பெறுவதற்காக பல ஊர்களின் மக்களும் நேர்த்திக் கடன்களை நிறைவேற்ற இத்தலத்தை நோக்கி தினமும் வருவர்.

மருதடி விநாயகர் ஆலயத்தில் மூன்று காலப் பூசைகள் காலந்தவறாது நடைபெறுகின்றன. ஒவ்வொரு மாதத்திலும் அமாவாசையை அடுத்துவரும் சதுர்த்தி திதியில் விநாயகப் பெருமானுக்கு விஷேடபூசைகள் நடைபெறும் ஆவணி சதுர்த்தி தினமானது பெருமானது திருசந்திதானத்தை பார்ப்பவர் கண்களை பூரிக்கச்செய்கின்றது.



இச்சதுர்த்தி “தேவர்கள் முனிவர் சித்தர் கந்தர்வர் யாவரும் வந்திவனேவல் செய்திடும்நாள்“ ஆக போற்றப்படுகின்றது. கார்த்திகை மாதத்தில் விநாயக விரதம் ஆரம்பமாகி இருபத்தொரு நாட்கள் பிள்ளையார் கதை வாசிக்கப்பட்டு கடைசிநாளிலே கஜமுக சூரசங்காரம் நடைபெறுவது இவ்வாலயத்தின் சிறப்புக்களில் ஒன்று.

மருதமரத்துப் பிள்ளையார் வருடத்திலே பங்குனி மாதத்தில் உற்சவம் ஆரம்பமாகி தமிழ்ச் சித்திரை ப்புத்தாண்டு தினத்தன்றை இரதோற்சவமாகக் கொண்டு ஆரம்பகாலத்தில் இருந்து 2004ஆம் ஆண்டு வரை பதினெட்டு நாட்கள் உற்சவமும் 2004ஆம் ஆண்டில் கற்றளி கோவிலாக மீண்டும் புதுபொலிவு பெற்று 2014ஆம் ஆண்டு 48 நாட்கள் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதன் பின்னர், பெருந்திருவிழா 25 நாட்கள் நடைபெற்று வருகின்றது.

பெருந்திருவிழா காலத்தில், மெய்யடியார்கள் காவடி எடுத்தல், தீச்சட்டி எடுத்தல், அங்கப்பிரதட்சணம் செய்தல், அடியழித்தல், அள்ளுகாசும் தென்னம்பிள்ளையும் வழங்கல், பிள்ளை விற்று வாங்கல், மடிப்பிச்சை எடுத்தல், பட்டுச் சார்த்துதல், தேவாரம் ஓதுதல், வடம்பிடித்தல் முதலான நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவர்.

இக்காலத்தில் புராண படனம் செய்தல், சமயப் பிரசங்கம் செய்தல், திருமுறைகள் ஓதுதல், ஓதுவார்களை அழைப்பித்து ஓதுவித்தல் முதலான சமய நிகழ்ச்சிகள் மக்களின் ஆன்மீக மேம்பாட்டுக்காக நடத்தப்படுகின்றன. மருத மரத்தடியில் வீற்றிருந்தருளும் விநாயகப் பெருமான் வேண்டும் அடியவர்க்கு வேண்டும் வரங்களை வழங்கிக் கொண்டிருக்கின்றான்.

பூவாழி மன்னர்மநு நீதி வாழி
புகலரிய மடமகளீர் நிறையும் வாழி
ஆவாழி அந்தணர்தங் கூட்டம் வாழி
அருமறைவே தாகமங்கள் புராணம் வாழி
ஓவாத தவங்கருணை விரதம் வாழி
உலகிலுள்ள சாரசரங்க ளனைத்தும் வாழி
மாவாழும் பிள்ளையார் திடரில் வாழும்
மருதடியிற் கணபதிதாள் வாழிவாழி.

என்று பெருந்திருவிழா காலத்தில் விநாயகப் பெருமானை மெய்யுருகி வழிபாடாற்றி சைவர்களாக சைவ வாழ்வு வாழ்ந்து இம்மை மறுமைப் பயன்களை நாம் பெற்றுய்வோமாக.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மார்ச் - 22 புதன்கிழமை
சுபகிருது வருடம் - பங்குனி 08
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : பிரதமை




**மேடம்**
குடும்மறைமுக விமர்சனங்களும் தாழ்வுமனப் பான்மையும் வந்து நீங்கும். பழைய கட னைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். திடீர் பயணங்கள் உண்டு. திடீர் திருப்பங்கள் உண்டாகும் நாள்.

**இடபம்**
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். ஆன் மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பிரியமானவர்க ளுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள்.

**மிதுனம்**
எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். பழைய நண்பர்கள் உறவினர்கள் தேடி வந்து உதவுவார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கடகம்**
வர வேண்டிய பணம் கைக்கு வரும். புண்ணிய ஸ்தலங்களுக்கு சென்று வருவீர்கள். கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். உத்தி யோகத்தில் புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் ஒரே நாளில் முக்கிய மான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். எதை முதலில் முடிப்பது என்ற ஒரு டென்ஷன் இருக்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**கன்னி**
மனைவி வழி உறவினர்களால் ஆதரவு பெருகும். மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் லாபம் ஈட்டுவீர் கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**துலாம்**
மனைவி வழி உறவினர்களால் ஆதரவு பெருகும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத் தில் லாபம் ஈட்டுவீர்கள். புது வாய்ப்புகள் தேடி வரும். தன்னம்பிக்கை துளிர் விடும் நாள்.

**விருட்சிகம்**
உறவினர் நண்பர்கள் சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். கனி வாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். தொட்டது துலங்கும் நாள்.

**தனுசு**
உங்களை சுற்றி இருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துக் கொள்வீர்கள். அக்கம் பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**மகரம்**
தாய்வழி உறவினர்களால் மனஸ்தாபம் வந்து நீங்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். புது வேலை அமையும். எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கும்பம்**
நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் இன்று முடியும். உறவினர்கள் மதிப்பார்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். உத்தியோகத் தில் ஆதரவு கிட்டும். உற்சாகமான நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தெளிவான முடிவு கள் எடுக்க முடியாமல் திணறுவீர்கள். குடும்பத்தில் சண்டை சச்சரவு வந்து நீங்கும். அடுத்தவர்கள் மனசு காயப்படும்படி பேசாதீர்கள்.

# கைதான இலங்கை மீனவர்களிடம் உளவுப் பிரிவினர் தீவிர விசாரணை



தூத்துக்குடி, மார்ச் 22

இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த இலங்கை மீனவர்கள் 6 பேரை தூத்துக்குடி இந்திய கடலோர காவல் படையினர் ஞாயிற்றுக் கிழமை கைது செய்தனர். அவர்களின் படகும் பறிமுதல் செய் யப்பட்டது.

கைதான மீனவர்கள் முகமது ரசார், நுவான், பிரகீத், ருவான், மதுரங், அப்துர் ரகுமான் ஆகியோர் நேற்று முன்தினம் மாலை தூத்துக்குடி துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டனர். பின்னர் அங்கிருந்து படகுமூலம் தருவைகுளம் கடற்கரை பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டு, கட லோர பாதுகாப்பு குழு பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட னர். கடலோர பாதுகாப்பு பொலிஸார் தருவைகுளம் கடலோர காவல்நிலையத்தில் வைத்து 6 மீனவர்களிடமும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் கியூ, ஐ. பி. உள் ளிட்ட மத்திய, மாநில உளவு பிரிவு பொலிஸாரும் இலங்கை மீனவர்களிடம் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். விசாரணைக்கு பின்னர் இராம நாதபுரத்தில் உள்ள சிறப்பு நீதி மன்றத்தில் முற்படுத்தி சென்னை புழல் சிறையில் அவர்களை அடைக்க பொலிஸார் நடவ டிக்கை எடுத்து வருகின்றனர். (ஐ)

# அ. தி. மு. க. பொதுச் செயலர் தேர்தலுக்கு தடை கோரிய வழக்கு விசாரணை இன்று

சென்னை, மார்ச் 22

அ. தி. மு. க. பொதுச் செய லாளர் தேர்தலுக்கு தடை விதிக் கக் கோரி கட்சியின் ஒருங்கி ணைப்பாளரான ஓ. பன்னீர்செல் வம், உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இந்த மனு இன்று புதன்கிழமை விசா ரணைக்கு வரவுள்ளது.

கடந்தாண்டு ஜூலை 11 அன்றுஅதிமுக பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங் களை எதிர்த்து பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் ஏற்கெனவே வழக்கு தொடர்ந்து அந்த வழக்கு நிலுவையில் உள்ளது.

இந்நிலையில் ஜூலை 11 பொதுக்குழுவில் நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தின் அடிப்ப டையில் அ. தி. மு. க. பொதுச் செயலாளர் பதவிக்கான தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டு, கட்சி யின் பொதுச்செயலாளர் பத விக்கு எடப்பாடி பழனிசாமி மனுதாக்கல் செய்திருந்தார்.

இதை எதிர்த்தும், கட்சியின் பொதுச் செயலாளர் தேர்தலுக் குதடை கோரியும் பன்னீர்செல் வம் ஆதரவு தரப்பு உயர் நீதிமன் றத்தில் மீண்டும் வழக்கு தொடர்ந் துள்ளனர்.

இதனிடையே, அந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், அ. தி. மு. க. பொதுச் செயலாளர் பதவிக்கான தேர்தலை நடத்த லாம். ஆனால், முடிவுகளை எதிர்வரும் 24ஆம் திகதி வரை அறிவிக்கக் கூடாது என்றும், இதுதொடர்பான பிரதான வழக்குவிசாரணை இன்று புதன் கிழமை நடைபெறும் எனவுமம் அதன்பிறகு இந்த வழக்குகளில் தீர்ப்பளிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது. (ஐ)

# வேற்றுமையில் ஒற்றுமை இதுவே இந்தியாவின் பலம்!

## தமிழ்நாடு ஆளுநர்

கோவை, மார்ச் 22

வேற்றுமையில் ஒற்றுமை இந்தியாவின் பலம் என தமிழ் நாடு ஆளுநர் ஆர். என். ரவி தெரிவித்துள்ளார்.

'ஜி20' இளம் தூதுவர்கள் உச்சி மாநாடு கோவை ஸ்ரீ கிருஷ்ணா கல்லூரி வளாகத்தில் நேற்று நடந்தது.

இதில் பேசிய ஆளுநர், தமிழ் நாட்டு மக்களின் கலாசாரம், பண்பாடு பல ஆயிரம் ஆண்டு கள் பழமையானது. புதிய நவீன உபகரணங்களால் மனிதர்களுக்கு மனஅழுத்தம், தற்கொலை, மன உளைச்சல் உள்ளிட்டவை அதி கரித்து காணப்படுகின்றன. கொரோனா காலத்தில் தடுப்பூ சிக்காக உலக நாடுகள் திண்டா டிய நிலையில், இந்தியா தடுப் பூசிகளை தயாரித்து அதனை உலக நாடுகளுக்கும் இலவசமாக வழங்கியது.

நம்மிடம் உள்ளதை மற்றவர் களுக்கு பகிர்ந்து கொள்ளும் பழக்கம் நமது மரபணுவிலேயே உள்ளது. தமிழில் கூறப்பட்டுள்ள 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது இந்தியாவில் உள்ள அனைத்து மொழிகளிலும் உள் ளது. கடந்த 9 ஆண்டுகளில் இந்தியா பல்வேறு மாற்றங்களை சந்தித்துள்ளது. உணவு உற்பத்தி யில் தன்னிறைவு அடைந்துள்ள போதும் ஒரு சில இடங்களில் பசியால் மக்கள் அவதிப்படும் நிலை காணப்படுகிறது. இந்தி யாவை ஒரு குடும்பம்போல் பிரதமர் பார்க்கிறார். வேற்று மையில் ஒற்றுமை இந்தியாவின் பலம் - என்றார். (ஐ)

# வாசன் காங்கிரஸுக்கு திரும்பினால் அவரின் கீழ் பணியாற்ற தயார்!

## அழகிரி அதிரடி அறிவிப்பு

சென்னை, மார்ச் 22

ஜி. கே. வாசன் காங்கிரஸ் கட்சிக்கு திரும்பினால் அவருக் குக் கீழ்பணியாற்றத் தயாராக இருக்கிறோம் என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ். அழகிரி அழைப்பு விடுத்துள்ளார். மதுரையில் த. மா. கா, அ. தி. மு. க. உள்ளிட்ட பல்வேறு கட்சியினர் காங்கிரஸ் கட்சியில் இணையும் நிகழ்ச்சி நேற்று நடந்தது.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற கே. எஸ். அழகிரி பேசியதாவது: காங்கிரஸ் கட்சியில் இருந்து பிரிந்து சென்ற ஜி. கே. மூப்ப னார் போன்ற பல தலைவர்கள் மீண்டும் காங்கிரஸ் கட்சிக்கு திரும்பிய வரலாறு உண்டு. த. மா. கா. தற்போது கொள்கை அடிப்படையில் இல்லாமல் தனி நபருக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் செயல் படுகிறது.

த. மா. கா. தலைவர் ஜி.கே. வாசனை மீண்டும் காங்கிர ஸுக்கு அழைக்கிறோம். அவ ருக்கு கீழ் பணியாற்றவும் என் னைப் போன்றவர்கள் தயாராக இருக்கிறோம் - என்றார்.

# அரசியலை நாசமாக்கிய ரணிலிடம் அமைச்சுப் பதவி கேட்கமாட்டோம்!

## டலஸ் அழகப்பெரும எம்.பி. காட்டம்

கொழும்பு, மார்ச் 22

**"கோட்டாபய ராஜபக்ஷ முழுப் பொருளாதாரத்தையும் நாசமாக்கினார். ரணில் விக்கிரமசிங்க முழு அரசியலையும் நாசமாக்குகின்றார். எனவே, இப்படிப்பட்ட ரணிலிடம் நாம் அமைச்சுப் பதவி கேட்டோம் என்பது பச்சைப் பொய்."**



- இவ்வாறு சுதந்திர மக்கள் சபையின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

'உங்களின் கட்சி எம்பிக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அமைச்சுப் பதவிகள் கேட்டதாக மஹிந்தானந்த அளுத்கமே எம்.பி. கூறுகின்றாரே?' என்ற கேள்விக்கு டலஸ் அழகப்பெரும எம்.பி. பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகிந்தானந்த அளுத்கமேயின் பேச்சை எப்படி நம்புவது? நாங்கள் 13 பேர் அரசில் இருந்து விலகி வந்தோம். அவர்களுள் 5 பேர் அமைச்சுப் பதவியைத் தூக்கி வீசிவிட்டு வந்தனர். அமைச்சுப் பதவி தேவை என்றால் நாங்கள் அரசுடன் இருந்திருப்போமே. எதற்காக நாம் வெளியே வரவேண்டும்?

ரணிலுடன் அமைச்சுப் பதவி கேட்டு இரவில் பேச வேண்டுமா? அப்படியே இருக்க முடிந்ததுதானே.

நாம் அமைச்சுப் பதவி கேட்டோம் என்பது பச்சைப் பொய். அரசியலில் இப்படிச் சேறு பூசுவது சாதாரண விடயம் - என்றார். (அ)

# தேர்தல் ஆணைக்குழு நாளை கூடுகின்றது

கொழும்பு, மார்ச் 22

தேர்தல் ஆணைக்குழு நாளை கூடவுள்ளதாக அதன் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியுமா, இல்லையா? என்பது குறித்து இறுதி தீர்மானத்தை எட்டுவதற்காக இவ்வாறு ஆணைக்குழு கூடவுள்ளது.

இதற்காக சகல அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சி ஹேவா கூறினார். (அ)

# அமைச்சர்கள் இருவர் தென்னாபிரிக்காவுக்கு

கொழும்பு, மார்ச் 22

நீதி மற்றும் சிறைச்சாலை விவகார அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி உள்ளிட்ட குழுவினர் நேற்றுக் காலை தென்னாபிரிக்கா சென்றுள்ளனர்.

நாட்டில் நிறுவப்படவுள்ள "உண்மை கண்டறியும் ஆணைக்குழு" பணிகள் முறையாகவும் வெற்றிகரமாகவும் மேற்கொள்ளப்பட வேண்டிய தன் அவசியத்தன்மை குறித்து தென்னாபிரிக்க அரசாங்கத்தின் அனுபவத்தைப் பெறுவதற்காகவே இந்த விஜயம் அமைந்துள்ளதாக நீதி அமைச்சு தெரிவித்துள்ளது.

(அ)




# சாவகச்சேரியில் விபத்து!

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்ப்பாணம் சாவகச்சேரி பிரதான வீதியில் அரசடிச் சந்தியில் கப்ரக வாகனமும் டிப்பர் கனரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகின.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த டிப்பர் வாகனம் முன்னால் சென்ற மோட்டார் சைக்கிளோடு மோதுவதை தவிர்ப்பதற்காக எதிர்த் திசையில் திடீரென திருப்பிய பொழுது முன்னால் வந்த கப்ரக வாகனத்தோடு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் கப் வாகனம் முற்றாகச் சேதமடைந்தது.

இவ் விபத்தை அடுத்து டிப்பர் சாரதி வாகனத்தை கைவிட்டு தப்பிச் சென்றுள்ளார். விபத்தில் கப் சாரதிக்கு தெய்வாதீனமாக எந்த காயங்களும் ஏற்படவில்லை. விபத்து தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# டொலரின் விலை வீழ்ச்சி

கொழும்பு, மார்ச் 22

ரூபாய்க்கு நிகரான அமெரிக்க டொலரின் கொள் விலை மற்றும் விற்பனை விலை நேற்று முன்தினத்துடன் ஒப்பிடுகையில் நேற்று குறைந்துள்ளது.

நாட்டில் உள்ள முக்கிய வங்கிகளின் நாணய மாற்று விகிதங்களின்படி நேற்று டொலரின் கொள் விலை 314 ரூபாயாகவும் விற்பனை விலை 330 ரூபாயாகவும் பதிவாகின.

# ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் தேர்தலொன்றே மிக அவசியம்

## கூறுகிறார் நவீன் திஸாநாயக்க

கொழும்பு, மார்ச் 22

"ஜனாதிபதி தேர்தல் அல்லது பாராளுமன்றத் தேர்தலே தற்போது அவசியம். மாறாக உள்ளாட்சிசபைத் தேர்தல் அவசியம் இல்லை." - என்று முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

மேற்படி இரு தேர்தல்கள் மூலமே ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த முடியும். அத்தகைய தொரு தேர்தலையே மக்கள் எதிர்பார்க்கின்றனர் எனவும் அவர் கூறினார்.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றால்கூட அதனை எதிர்கொள்வதற்கு தமது கட்சி தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்தார். (அ)

# வடக்கில் மாணவர் இன்மையால் 103 பாடசாலைகளுக்கு மூடுவிழா!

யாழ்ப்பாணம், மார்ச் 22

வடக்கு மாகாணத்தில் போர் முடிவடைந்த பின்னரான 14 ஆண்டுகள் காலப் பகுதியில் மாணவர்கள் இல்லாமையால் 103 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 49 பாடசாலைகளும், கிளிநொச்சியில் 8 பாடசாலைகளும், மன்னார் மாவட்டத்தில் 10 பாடசாலைகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 பாடசாலைகளும், வவுனியா மாவட்டத்தில் 34 பாடசாலைகளுமே இவ்வாறு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

வவுனியாவில் வவுனியா வடக்கு கல்வி வலயத்திலேயே இந்த எண்ணிக்கை உயர்வாகப் பதிவாகியுள்ளது-என்றார்.

-வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் அ.உமாமகேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கில் எந்தவொரு பாடசாலையும் நிரந்தரமாக மூடப்படவில்லை. வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் கூறிய 103 பாடசாலைகளும் தற்காலிகமாகவே மூடப்பட்டுள்ளன. மாணவர் பற்றாக்குறை காரணமாகவே இவை மூடப்பட்டுள்ளன.

இதற்கு இடப்பெயர்வுகள், நகர்ப் புற பாடசாலைகளின் வளர்ச்சி, நகரமயமாக்கல், சனத்தொகைப் பற்றாக்குறை எனப் பல காரணங்கள் காணப்படுகின்றன.

மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பால் இன்று சில பாடசாலைகளில் புதிதாகக் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. மறுபுறம் சில பாடசாலைகள் மூடப்படுகின்றன. நகர்ப்புற பாடசாலைகளின் வளர்ச்சியும் இதற்குக் காரணம்.

பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு சில இடங்களில் மக்கள் இல்லை. சில இடங்களில் நகரமயமாக்கல் பெரும் செல்வாக்கு செலுத்துகின்றது.

இது குறித்து நாம் அவதானம் செலுத்துகின்றோம். முறைப்படியான விழிப்புணர்வு நடவடிக்கைகளை எமது தரப்பில் நாமும் முன்னெடுப்பதற்குத் தயாராக உள்ளோம்.

தற்காலிகமாகப் பாடசாலைகளை மூடுவது எமது விருப்பு அல்ல. போதிய எண்ணிக்கையான மாணவர்கள் வருகை தருவார்களாயின் நிச்சயமாக பாடசாலைகள் மீள ஆரம்பமாகும்-என்றார். (அ)

# ஆங்கில மொழியில் சட்டக் கல்லூரி பரீட்சை; வர்த்தமானியை இரத்துச் செய்யத் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 22

சட்டக்கல்லூரி பரீட்சைகளை ஆங்கில மொழியில் மாத்திரம் நடத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தல் 112 பெரும்பான்மை வாக்குகளால் நேற்று பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டது.

வர்த்தமானி அறிவித்தலுக்கு ஆதரவாக 113 வாக்குகளும் எதிராக ஒரு வாக்கும் பதிவாகியிருந்தன. இந்த வர்த்தமானி மீது வாக்கெடுப்பு தேவை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அதன்படி வாக்கெடுப்பு நடைபெற்றது. காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி மாத்திரம் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தார். (அ)

# இலங்கை மக்களின் மகிழ்ச்சி அதிகரிப்பாம்!

கொழும்பு, மார்ச் 22

2023ஆம் ஆண்டுக்கான உலக வருடாந்த மகிழ்ச்சி அறிக்கையில், உலகின் மகிழ்ச்சியான நாடாக பின்லாந்து அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை 112 ஆவது இடத்தில் உள்ளது. கடந்த வருடம் 127ஆவது இடத்தில் இருந்தது.

தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி, சமூக ஆதரவு, ஆரோக்கியமான ஆயுட்காலம், சுதந்திரம், தாராள மனப்பான்மை மற்றும் குறைந்த ஊழல் உள்ளிட்ட காரணிகளின் அடிப்படையில் மகிழ்ச்சியான நாடுகள் தெரிவு செய்யப்படுகிறது.

பின்லாந்து தொடர்ந்து 6வது ஆண்டாக உலகின் மகிழ்ச்சியான நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மகிழ்ச்சி தினமாக கொண்டாடப்படும் கடந்த திங்கள்கிழமை (மார்ச் 20) இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

இந்த அறிக்கையில் இந்தியா 125ஆவது இடத்தில் உள்ளது.

கடந்த ஆண்டைப் போலவே, இந்த ஆண்டு பட்டியலில் நோர்டிக் நாடுகள் பல முதல் இடங்களில் உள்ளன. டென்மார்க் 2ஆவது இடத்திலும், ஐஸ்லாந்து 3ஆவது இடத்திலும் உள்ளது.

"நோர்டிக் நாடுகள் பொதுவாக உயர்ந்த தனிநபர் மற்றும் நிறுவன நம்பிக்கையின் அடிப்படையில் முன்னணியில் உள்ளன. கோவிட்-19 இறப்பு விகிதங்கள் மேற்கு ஐரோப்பாவில் மற்ற இடங்களை விட மூன்றில் ஒரு பங்காக மட்டுமே இருந்தன" என்று அறிக்கையின் ஆசிரியர்கள் ஆவணத்தில் தெரிவித்தனர்.

வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் ஒன்றான இந்தியா இந்தப்பட்டியலில் இலங்கை, நேபாளம், சீனா, பங்களாதேஷுக்கு கீழே, அறிக்கையில் 126வது இடத்தில் உள்ளது.

ரஷ்யா-உக்ரைன் போர் இரு நாடுகளின் தரவரிசையில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. ரஷ்யா 72ஆவது இடத்திலும், உக்ரைன் 92ஆவது இடத்திலும் உள்ளது.

(அ)

# 40 பயணிகளுடன் சென்ற தனியார் பஸ் தீ பிடித்தது!

கொழும்பு, மார்ச் 22

ஹொரணை - இரத்தினபுரி வீதியில் பொரலுகொட முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்கு அருகில் தனியார் பேருந்து ஒன்று நேற்றுக் காலை தீயில் எரிந்து நாசமானது. தீ விபத்து ஏற்பட்டபோது பேருந்தில் சுமார் 40 பயணிகள் இருந்த போதிலும், உயிரிழப்பு அல்லது காயங்கள் எதுவும் ஏற்படவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

தீ பரவியவுடன் பயணிகள் பேருந்தில் இருந்து வெளியேறியதாகவும், இரத்தினபுரியில் இருந்து பாணந்துறை நோக்கி பயணித்த குறித்த பேருந்தின் முன்பகுதி, பொரலுகொட முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்துக்கு முன்பாக நிறுத்தப்பட்டபோது தீப்பிடித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. (அ)

# ஜனாதிபதியும் அரசும் சேர்ந்து அரசியல் சூழ்ச்சி செய்கின்றனர்

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 22

**சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தங்களை அரசாங்கம் எப்போது நடைமுறைப்படுத்தப் போகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வியெழுப்பியுள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்த கேள்வியை எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அந்த ஒப்பந்தத்திற்கு அமைய மறுசீரமைக்கப்படும் அரசநிறுவனங்கள் எவை, குறித்த ஒப்பந்தத்தில் உள்ள ஏனைய நிபந்தனைகள் என்ன?

அத்துடன் அந்த ஒப்பந்தத்தை இந்தவாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியுமா? நாங்கள் பல சந்தர்ப்பங்களில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தங்களை சபையில் முன்வைக்குமாறு கோரியிருந்தோம்.

நாட்டின் தற்போதைய ஜனாதிபதி கடந்த ஆட்சி காலத்தின்போது சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கைகளை சபையில் சமர்ப்பிக்காமை தொடர்பில் குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்தநிலையில் மக்களின் ஆதரவை பெறுவதற்கான தேர்தலை ஒத்திவைக்கும் அரசாங்கம், சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய தரப்பினருடன் மேற்கொள்ளும் ஒப்பந்தங்கள் மற்றும் தீர்மானங்களுக்கு பொதுமக்களின் ஆதரவை பெறுவது எவ்வாறு?

பொதுமக்களின் ஆதரவோ ஆணையோ இல்லாமலேயே அரசாங்கம் தந்திரமாக தீர்மானங்களை மேற்கொள்கிறது.

அதுமாத்திரமன்றி தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதன் நீதியையும் நாட்டின் சட்டங்களையும் மதிக்காது தேர்தலை ஒத்திவைக்கிறார்கள். உண்மையில் இது ஜனாதிபதியும் அரசாங்கமும் சேர்ந்து மேற்கொள்ளும் அரசியல் ரீதியாக சூழ்ச்சியாகும் - என்றார். (அ)

# நிதியமைச்சின் செயலருக்கு எதிராக இரண்டு மனுக்கள்!

கொழும்பு, மார்ச் 22

நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாக குற்றம் சுமத்தி நேற்று உயர் நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

உயர் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு அமைய சிறிவர்தன செயற்படத் தவறியதாக குற்றம் சுமத்தி ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இந்த மனுவை தாக்கல் செய்தார்.

கடந்த 3 ஆம் திகதி, உள்ளூராட்சித் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட பாதீட்டு நிதியை நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் தடுத்து வைப்பதைத் தடுக்கும் இடைக்கால உத்தரவை மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் பிறப்பித்தது.

முன்னர் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவின் பேரில் நிதி அமைச்சின் செயலாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு மற்றொரு உத்தரவை பிறப்பிக்குமாறு உயர்நீதிமன்றத்தை மனுதாரர் கோரியுள்ளார்.

இதேவேளை, நிதியமைச்சின் செயலாளருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டாரவும் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

2023 ஆம் ஆண்டுக்கான பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான நிதியை நிறுத்தி வைப்பதில் இருந்து உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு இணங்கத் தவறியதற்காக, நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தனவுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டை முன்வைத்து இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (அ)

# இலங்கைக்கான ஆதரவு தொடர்ந்து வழங்கப்படும்

## ஐரோப்பிய ஒன்றியம் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 22

இலங்கைக்கான ஆதரவு தொடர்ந்தும் வழங்கப்படும் என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள ஐரோப்பிய ஒன்றிய தூதரகத்தின் உத்தியோகப்பூர்வ ருவிட்டர் பக்கத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கான கடனை சர்வதேச நாணய நிதியம் அங்கீகரித்தமையை வரவேற்றுள்ள ஐரோப்பிய ஒன்றியம், கடன் மறுசீரமைப்பு, திறந்த சந்தைகள், நிதி ஒத்துழைப்பு மற்றும் சீர்திருத்தங்கள் ஆகியவற்றினை விரைவாக அடைவதற்காக முயற்சிகளில் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கப்படும் என அறிவித்துள்ளது.

அத்துடன் இலங்கையின் பொருளாதார ஆற்றலைத் அடைவதற்கு ஒரு கடினமான பாதை உள்ளது எனவும் ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# லிஸ்டீரியோசிஸ் தொற்று இலங்கையில் இல்லை!

கொழும்பு, மார்ச் 22

லிஸ்டீரியோசிஸ் தொற்று நோய் நாட்டில் இல்லை எனவும் அது குறித்து தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்தி கொள்ள தேவையில்லை எனவும் தொற்று நோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

லிஸ்டீரியா மொனோசைட்டஜன் பக்றீரியா தொற்றால் ஏற்படும் இந்த நோயால் சிவனொளிபாத மலைக்கு செல்லும் ஒரு வழியில், சிறிய கடை ஒன்றை நடத்திச் சென்ற பெண் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் தொற்று நோய் தடுப்பு பிரிவு அறிக்கை விடுத்து குறித்த விடயத்தை குறிப்பிட்டுள்ளது.

சிவனொளிபாத மலைக்கு சென்ற மேலும் இருவர் உயிரிழந்தமையை அடுத்து இந்த நோய் குறித்த கருத்தாடல் அதிகரித்தது.

எனினும் அவர்களது உயிரிழப்புக்கு லிஸ்டீரியாவால் ஏற்பட்டமை இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை.

மரண பரிசோதனைகளின் போது பெறப்பட்ட மாதிரிகளில் தற்போது ஆய்வுகள் முன்னெடுக்கப்படுவதாக தொற்று நோய் தடுப்பு பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய ஆசிரியர்களுக்கு இடமாற்றங்கள்

கொழும்பு, மார்ச் 22

ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய வழங்கப்பட்டு வருகின்றன. ஒரு தொகை ஆசிரியர்களுக்கான இடமாற்றக் கடிதங்கள் அஞ்சலிடப்பட்டுள்ளன.

க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளுடன் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கான இடமாற்றக் கடிதங்களும் சில மாதங்களில் அனுப்பத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசேட கூற்றொன்றை முன்வைத்து எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- ஆசிரியர் இடமாற்றத்தில் தன்னிச்சையான எந்தச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை. இடமாற்றங்கள் தீர்மானித்தபடியே வழங்கப்படுகின்றன.

2020, 2021, 2022 ஆகிய மூன்று வருடங்களிலும் நாட்டில் நிலவிய கொரோனா வைரஸ் சூழ்நிலை காரணமாக தேசிய பாடசாலை ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் வழங்கப்படவில்லை. அதனால் கடந்த வருடம் 14, 500 விண்ணப்பங்கள் கல்வி அமைச்சுக்கு கிடைத்துள்ளன.

அதற்கான இடமாற்ற சபையொன்று நடைமுறையில் உள்ளது. அமைச்சின் பணிப்பாளர்கள் மற்றும் தொழிற்சங்கத்தினரும் அந்த சபையில் உள்ளடங்குகின்றனர்.

அந்த வகையில் இரண்டு விதமாக ஆசிரிய இடமாற்றங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதில் ஒன்று சாதாரணமாக கோரப்படும் இடமாற்றம். நீண்டகாலமாக கஷ்டப் பிரதேசங்களில் சேவையில் ஈடுபடுபவர்களும் இதில் உள்ளடங்குவர்.

மற்றையது 2017 ஆம் ஆண்டு அமைச்சரவை அங்கீகாரத்துடன் வெளியிடப்பட்ட வர்த்தமானியை அடிப்படையாகக் கொண்டது.

அந்த வகையில் 10 வருடங்களுக்கு மேல் ஒரே பாடசாலையில் உள்ளவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படுவதை அடிப்படையாக வைத்தே நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

2017 ஆம் ஆண்டில் இருந்தே இந்த இடமாற்றம் வழங்கப்பட்டு வருகின்றது. எனினும் கடந்த மூன்று வருடங்களில் கொரோனா சூழ்நிலை காரணமாக இது இடம்பெறாததால் அனைத்தையும் ஒன்றாக தற்போது எடுத்துள்ளோம். அந்த வகையில் மொத்தமாக 8893 இடமாற்றங்களுக்கான அனுமதி இடமாற்ற சபை மூலம் கிடைத்துள்ளது.

இதில் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் 681 பேர் அடங்குகின்றனர். அதில் 388 பேருக்கான இடமாற்ற கடிதங்கள் தபாலில் இடப்பட்டுள்ளன. மீதமானவை உடனடியாகவே தபாலில் இடப்படும்.

சுமார் ஆயிரம் ஆசிரியர்கள் பத்து வருடங்களுக்கு மேல் ஒரே இடத்தில் சேவையாற்றி கட்டாய இடமாற்றத்திற்காக காத்திருக்கிறார்கள்.

எனினும் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களும் இடமாற்றம் பெற்றுள்ள ஆசிரியர்களும் எதிர்வரும் கல்வி பொதுதராதர சாதாரண தரப் பரீட்சை இடம்பெறவுள்ளதால் மாணவர்களின் நன்மை கருதி அந்த இடமாற்றத்தை அதன் பிறகு மேற்கொள்ள மேல் முறையீடு மூலம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அதனால் அது தொடர்பான விடயம் ஆலோசனை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு அக்டோபர் மாதத்திற்கு பின்னர் இடமாற்றம் வழங்கவும் ஏனைய ஆசிரியர்களுக்கு உடனடியாக இடமாற்றம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க பாடசாலை விடுமுறை முடிவடைந்ததும் ஏப்ரல் மாதத்தில் இணைவதற்கான கடிதம் அனுப்பப்படும். எவ்வாறாயினும் இந்த பிரச்னைக்கு முழுமையான தீர்வு காணப்பட்டுவிட்டது - என்றார். (அ)

# சிறப்புரிமை மீறல் தொடர்பான பிரேரணை 32 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றம்!

கொழும்பு, மார்ச் 22

பாராளுமன்ற உறுப்பினர்களதும், பாராளுமன்றத்தினதும் சிறப்புரிமை மீறப்படுகின்றமை தொடர்பில் விசாரணை செய்து, பரிந்துரைகளை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட பாராளுமன்ற விசேட தெரிவுக்குழுவின் பரிந்துரைகளை சட்டமா அதிபரிடம் சமர்ப்பிப்பது தொடர்பான பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த பிரேரணையை நிறைவேற்றிக்கொள்ள ஆளும் கட்சி முயற்சித்தது.

இதன்போது, பிரேரணை தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என எதிர்க் கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல கோரிக்கை விடுத்தார்.

பிரேரணை தொடர்பில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பின் போது, பிரேணைக்கு ஆதரவாக 75 வாக்குகளும், எதிராக 43 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதற்கமைய, 32 மேலதிக வாக்குகளால் குறித்த பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் இந்த பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, சுதந்திர மக்கள் கூட்டணி மற்றும் மேலவை இலங்கை கூட்டணி ஆகிய கட்சிகள் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்பன வாக்கெடுப்பின்போது சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை. (அ)

# ஒரு கடினமான பாதையை இலங்கை கடக்கவேண்டும்

## மூடிஸ் எனலைட்டிக்ஸ் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 22

பலதரப்பு மற்றும் உலகளாவிய நிதி நிறுவனங்களிடமிருந்து எவ்வளவு நிதியைப் பெற்றாலும் இலங்கை ஒரு கடினமான பாதையை கடக்க வேண்டியுள்ளதாக மூடிஸ் எனலைட்டிக்ஸ் நிறுவனத்தின் சிரேஷ்ட பொருளாதார நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

மூடிஸ் எனலைட்டிக்ஸ், மதிப்பீட்டு முகவரகமானது, மூடிஸ் முதலீட்டாளர்கள் சேவையிலிருந்து சுயாதீனமானதாகும்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு சுமார் 3 பில்லியன் டொலர் பிணையெடுப்புக்கு அனுமதி அளித்தது. இந்த திட்டமானது 7 பில்லியன் டொலர்களை ஒட்டுமொத்த நிதியுதவியாக அணுக உதவும் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.

மூடிஸ் எனலைட்டிக்ஸ் நிறுவனத்தின் சிரேஷ்ட பொருளாதார நிபுணர் கத்ரீனா எல் கூறுகையில், "சர்வதேச நாணய நிதியத்தின் பிணையெடுப்பானது வெளித்தோற்றத்தில் மாயாஜாலம் காட்டும் வெள்ளித் தோட்டாவாக இருக்காது.

அரசாங்கத்திடமிருந்தும் இலங்கையின் வளர்ச்சி வாய்ப்புகளிலும் சில குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் காணாத வரையில் நிதிச் சந்தைகளில் வெளிப்படும் உற்சாகம் உண்மையில் மங்கியிருக்கும்.

எதிர்வரும் மாதங்களில் நாடு பெறும் அனைத்து மேலதிக நிதிகளும் நல்ல செய்திகளே, ஆனால் நிதி விவேகம் மற்றும் கடன் நிலைத்தன்மை ஆகியவை முக்கியமாக இருக்கும்" என்று பொருளாதார நிபுணர் கூறினார்.

"இலங்கை மீது எவ்வளவு சாத்தியமான நிதி அல்லது ஆதரவு வீசப்பட்டாலும் அது இன்னும் கடினமான பாதையாகவே இருக்கும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்" என்று கத்ரீனா எல் கூறினார். (அ)

# சூதாட்ட வரிச் சட்டமூலத்திற்கு அமைச்சரவை நேற்று அங்கீகாரம்

கொழும்பு, மார்ச் 22

திருத்தப்பட்ட பந்தயம் மற்றும் சூதாட்ட வரி சட்டமூலத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது, இது விரைவில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த யோசனையை அமைச்சரவையில் முன்வைத்தார்.

1988ஆம் ஆண்டு 40ஆம் இலக்க பந்தயம் மற்றும் சூதாட்ட வரிச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கு கடந்த ஜூலை 4ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

அதன் பிரகாரம் வரைவினால் தயாரிக்கப்பட்ட இந்த சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்துள்ளதாக பந்துல குணவர்தன தெரிவித்தார். (அ)

# அரசை வீழ்த்தி எதிர்க்கட்சியினர் ஆட்சியை கைப்பற்ற எண்ணினர்!

## மகிந்தானந்த குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 22

நாணய நிதியத்திடமிருந்து கடனைப் பெறாமல் அரசாங்கம் வீழ்ந்த பின்னர் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்க எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் முயற்சித்தார்கள் என மஹிந்தானந்த அழுத்கமகே குற்றம் சாட்டினார்.

மக்களை வீதிக்கு இறக்கிவிட்டு ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற எதிர்கட்சியால் பல அரசியல் நாடகங்கள் மேற்கொள்ளப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டுக்கு நிதி உதவி கிடைக்கக்கூடாது என்பதே அவர்களின் விருப்பம் எனவும் மகிந்தானந்த குற்றம் சாட்டினார்.

இவ்வாறு எண்ணியவர்கள் எதிர்க்கட்சியில் உள்ளார்கள் என்றும் இருப்பினும் அவர்களது பெயரை அம்பலப்படுத்த போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# 76247 சுற்றுலாப் பயணிகள் மார்ச் 19 வரை இலங்கைக்கு!

கொழும்பு, மார்ச் 22

இந்த மாதத்தில் கடந்த 19 ஆம் திகதிவரை, நாட்டுக்கு 76,247 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகைதந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் வாராந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சராசரியாக நாளொன்றில், 4013 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக அந்த அறிக்கையில், தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் ரஷ்யாவிலிருந்து வருகை தந்துள்ளதாகவும், அதன்படி அந்நாட்டிலிருந்து 16,588 சுற்றுலாப் பயணிகள் இவ்வாறு வருகை தந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இவ்வருடத்தில் கடந்த 19 ஆம் திகதிவரையில் 286,431 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# மீன் ஏற்றுமதி வருமானம் முறையாக கிடைப்பது உறுதி செய்யப்படவேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



கொழும்பு, மார்ச் 22

கடலுணவுகளின் ஏற்றுமதியின் மூலம் நாட்டுக்கு கிடைக்கும் அந்நிய செலாவணி உரிய முறையில் பேணப்படுவதில்லை என்று சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் நிலையில் கடலுணவு ஏற்றுமதியின் மூலம் பெறப்படும் அந்நியச் செலாவணி முறையாக கிடைப்பதை உறுதி செய்வது மீன் ஏற்றுமதியாளர்களின் பொறுப்பாகும் எனவும் தெரிவித்தார்.

வெளிநாடுகளுக்கு கடலுணவுகளை ஏற்றுமதி செய்வோர் தற்போதைய நிலையில் எதிர்கொண்டுள்ள சவால்கள், மற்றும் ஏற்றுமதி செய்யப்படும் கடலுணவுகளுக்கான வருமானம் தொடர்பாக, கடற்றொழில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது, வெளிநாடுகளில் இருந்து மீன்களை வரவழைத்து மீள் ஏற்றுமதி செய்வதன் மூலம் உள்ளூர் மீன் தட்டுப்பாடு நிலவும் வேளையில் தமது தொழிலை சீராக பேண சந்தர்ப்பம் வழங்குமாறு ஏற்றுமதியாளர்கள் விடுத்த கோரிக்கையை கவனத்தில் எடுத்த கடற்றொழில் அமைச்சர், எமது நாட்டைச் சுற்றி கடல்வளமும் நாட்டினுள் நீர் வேளாண்மைக்கு ஏதுவான சூழலும் நிறைந்திருக்கும் நிலையில், தேவையான கடலுணவுகளை நாமே உற்பத்தி செய்ய வேண்டும் என்பதே தன்னுடைய எதிர்பார்ப்பாக இருப்பதாகவும், எவ்வாறெனினும் குறித்த கோரிக்கை தொடர்பாக விரிவாக கலந்துரையாடி முடிவெடுக்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

அதேபோன்று பல நாள் மீன்பிடிப்படகுகளின் உரிமையாளர்களுடன் கலந்துரையாடி, நியாயமான - நிலையான விலையை நிர்ணயித்துக் கொள்ளுமாறும் அமைச்சர் ஏற்றுமதியாளர்களிடம் கேட்டுக்கொண்டார்.

மேலும், பலநாள் கடற்றொழிலாளர்களின் மீன்பிடி கலன்களில் கடலுணவுகளை பாதுகாக்கும் பொருட்டு, தொழில்நுட்பக் கருவிகளை பொருத்துவதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறு கடற்றொழில் அமைச்சர் ஏற்றுமதியாளர்களிடம் கேட்டுக் கொண்டார்.

இக்கலந்துரையாடலில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து ரத்நாயக்க, கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த உட்பட அமைச்சின் உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஈராக்கில் சதாம் ஹுசேனை வீழ்த்திய வல்லரசுகள்: 20 வருடங்களுக்கு முந்தைய வரலாறு எழுப்பும் கேள்விகள்!



2003ஆம் ஆண்டு, மார்ச் 20ஆம் திகதி அமெரிக்கா மற்றும் அதன் நேச நாட்டுப் படைகள் ஈராக் மீது படையெடுத்து சதாம் ஹுசேனின் ஆட்சியை வீழ்த்தின.

ஈராக்கிடம் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாகவும், அது சர்வதேச அமைதிக்கு அச்சுறுத்தல் என்றும் அமெரிக்கா கூறியது. ஆனால் பெரும்பாலான நாடுகள் ஈராக்குக்கு எதிரான ராணுவ நடவடிக்கையை ஆதரிக்க மறுத்து விட்டன.

**படையெடுப்பை அமெரிக்கா விரும்பியது ஏன்?**

1990-1991 வளைகுடா போரில், அமெரிக்கா ஒரு பன்னாட்டு கூட்டணிக்குத் தலைமை ஏற்று நடத்தியது. இது ஈராக் படைகளைக் குவைத்திலிருந்து வெளியேற்றியது.

பின்னர், ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் தீர்மானம் 687ஐ நிறைவேற்றி, ஈராக்கின் அனைத்துப் பேரழிவு ஆயுதங்களையும் அழிக்க உத்தரவிட்டது - பேரழிவு ஆயுதங்கள் என்பது அணு, உயிரியல் மற்றும் ரசாயன ஆயுதங்கள் மற்றும் நீண்ட தூர பாலிஸ்டிக் ஏவுகணைகளை உள்ளடக்கியது.

1998 இல், ஈராக் ஐ.நா ஆயுத ஆய்வாளர்களுடனான ஒத்துழைப்பை நிறுத்திய பின், அமெரிக்காவும் பிரிட்டனும் வான் வழி தாக்குதல்களால் பதிலடி கொடுத்தன.

நியூயார்க்கில் உள்ள உலக வர்த்தக மையம் மற்றும் வாஷிங்டனில் உள்ள பென்டகன் மீது அல்-கொய்தா நடத்திய 11 செப்டம்பர் 2001 தாக்குதல்களுக்குப் பிறகு, அதிபர் ஜார்ஜ் டபிள்யூ புஷ் நிர்வாகம் ஈராக் மீது படையெடுப்பதற்கான திட்டங்களைத் தொடங்கியது.

சதாம் தொடர்ந்து பேரழிவு ஆயுதங்களைச் சேமித்து தயாரித்து வருவதாகவும், ஈரான் மற்றும் வட கொரியாவுடன் ஒரு சர்வதேச 'தீய சக்திகளின்' ஒரு பகுதியாக ஈராக் இருப்பதாகவும் அதிபர் புஷ் கூறினார்.

அக்டோபர் 2002இல், அமெரிக்க நாடாளுமன்றம் ஈராக்கிற்கு எதிராக ராணுவ பலத்தைப் பயன்படுத்த அனுமதித்தது.

'ஈராக் பேரழிவு ஆயுதங்களை வைத்திருப்பதற்கு குறிப்பிடத்தக்க சான்றுகள் இருப்பதாக வாஷிங்டனில் உள்ள பலர் நம்பினர். அது உண்மையான அச்சுறுத்தலை ஏற்படுத்தியது" என்று லண்டனில் உள்ள சதம் ஹவுஸில் ஒரு வெளிநாட்டு விவகார சிந்தனைக் குழுவின் அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள் மற்றும் அமெரிக்கா செயல்முறைத் திட்டத்தின் இயக்கநர் டாக்டர் லெஸ்லி வின்ஜமுரி கூறுகிறார்.

பிப்ரவரி 2003இல், அப்போதைய அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளரான கொலின் பவல், ஈராக்கிற்கு எதிரான ராணுவ நடவடிக்கைக்கு அனுமதி வழங்குமாறு ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலை கேட்டுக் கொண்டார். அந்நாடு, அதன் பேரழிவு ஆயுத திட்டத்தால் முந்தைய தீர்மானங்களை மீறுவதாக குற்றம்சாட்டினார்.

ஆனால், அவர் சபையை வற்புறுத்தவில்லை. 2002 இல் ஈராக்கிற்குச் சென்ற



ஐ.நா மற்றும் சர்வதேச எரிசக்தி ஆணையத்தின் ஆயுத ஆய்வாளர்களில் பெரும்பாலானோர், பேரழிவு ஆயுதங்களின் ஆதாரங்களைக் கண்டறிய முனைய விரும்பினர்.

ஆய்வாளர்கள் அறிக்கைக்காகக் காத்திருக்கப் போவதில்லை என்று கூறிய அமெரிக்கா, ஈராக்கிற்கு எதிராக 'விருப்பமுள்ளவர்களின் கூட்டணியை" கூட்டியது.

**போரை ஆதரித்த நாடுகள்**

கூட்டணியில் இருந்த 30 நாடுகளில், பிரிட்டன், ஆஸ்திரேலியா, போலந்து ஆகியவை படையெடுப்பில் பங்கேற்றன. பிரிட்டன் 45,000 துருப்புகளையும், ஆஸ்திரேலியா 2,000 துருப்புகளையும், போலாந்து 194 சிறப்புப் படை உறுப்பினர்களையும் அனுப்பின. குவைத் தனது எல்லையில் இருந்து படையெடுப்பை நடத்த அனுமதித்தது.

'வில்னியஸ் குழுவில்" உள்ள பல கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் சேர்ந்து, ஸ்பெயினும் இத்தாலியும் அமெரிக்க தலைமையிலான கூட்டணிக்கு ராஜீய ஆதரவை அளித்தன.

ஈராக் ஒரு பேரழிவு ஆயுதத் திட்டத்தைக் கொண்டிருப்பதாகவும், ஐ.நா தீர்மானங்களை மீறுவதாகவும் அந்த நாடுகள் அனைத்தும் நம்பின.

**அமெரிக்காவும் பிரிட்டனும் சுமத்திய குற்றச்சாட்டுகள்**

ஈராக்கில் உயிரியல் ஆயுதங்களைத் தயாரிப்பதற்கான 'மொபைல் ஆய்வகங்கள்" இருப்பதாக 2003ஆம் ஆண்டு ஐ.நா.விடம் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் கொலின் பவல் தெரிவித்தார். இருப்பினும், 2004 ஆம் ஆண்டில், இதற்கான ஆதாரம் 'திடமாக இல்லை" என்று ஒப்புக்கொண்டார்.

கிழக்கு மத்தியதரைக் கடலில் உள்ள இங்கிலாந்து இலக்குகளைத் தாக்க 45 நிமிடங்களுக்குள் ஈராக்கிய ஏவுகணைகள் தயார் செய்யப்படலாம் என்று பிரிட்டன் அரசாங்கம் ஒரு உளவுத்துறை ஆவணத்தை வெளியிட்டது.

பிரிட்டனின் அப்போதைய பிரதமர் டோனி ப்ளேர், சந்தேகத்துக்கு இடமின்றி சதாம் ஹுசேன் தொடர்ந்து பேரழிவு ஆயுதங்களை தயாரிக்கிறார் என்று கூறினார்.

ஈராக்கின் திட்டத்தைப் பற்றி தங்களுக்கு நேரடியாகத் தெரியும் என்று கூறிய ரபித் அஹ்மத் அல்வான் அல்-ஜனாபி என்ற ரசாயன பொறியாளர் மற்றும் மேஜ் முஹம்மது ஹரித் என்ற உளவுத் துறை அதிகாரி ஆகிய இரு ஈராக்கியர்களின் கூற்றுகளை இரு நாடுகளும் பெரிதும் நம்பி இருந்தன. வேண்டும் என்றே ஆதாரங்களை இட்டுக்கட்டியதாக அந்த இருவரும் பின்னர் கூறினர்.

**போரை ஆதரிக்க மறுத்த நாடுகள்**

அமெரிக்காவின் இரண்டு அண்டை நாடுகளான கனடா மற்றும் மெக்சிகோ இதற்கு ஆதரவளிக்க மறுத்துவிட்டன. ஐரோப்பாவில் இரண்டு முக்கிய அமெரிக்க நட்பு நாடுகளான ஜெர்மனியும் பிரான்சும் ஆதரவை மறுத்தன.

பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் டொமினிக் தி வில்பின், ராணுவ தலையீடுதான் 'மோசமான தீர்வாக இருக்கும்" என்றார்.

துருக்கி - சக நேட்டோ உறுப்பினர் மற்றும் ஈராக்கின் அண்டை நாடு- அமெரிக்கா மற்றும் நட்பு நாடுகளை அதன் விமான தளங்களைப் பயன்படுத்த அனுமதிக்க மறுத்தது.

1990-91 வளைகுடா போரில் ஈராக்கிற்கு எதிராக அமெரிக்காவை ஆதரித்த சவூதி அரேபியா போன்ற மத்திய கிழக்கு நாடுகள் 2003இல் அதன் படையெடுப்பை ஆதரிக்கவில்லை. லண்டன் சோஸ் பல்கலைக்கழகத்தில் மத்திய கிழக்கு அரசியலில் நிபுணரான பேராசிரியர் கில்பர்ட் அச்சார், 'வளைகுடா அரபு நாடுகள் இந்த திட்டத்தை முட்டாள்தனம் என்று நினைத்தன." சதாமின் ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு ஈரான் ஈராக்கை கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விடும் என்று அவர்கள் கவலைப்பட்டன," என்கிறார்.

**போரில் என்ன நடந்தது?**

20 மார்ச் 2003 அன்று விடியற்காலையில், ஆபரேஷன் ஈராக்கி ப்ரீடம், 2,95,000 அமெரிக்க மற்றும் நட்பு நாடுகளின் படைகள் குவைத்துடனான ஈராக் எல்லை வழியாக ஈராக்கை ஆக்கிரமித்தன.

குர்திஷ் பெஷ்மெர்கா போராளிகளின் 70,000 உறுப்பினர்கள் நாட்டின் வடக்கில் ஈராக் படைகளுடன் போரிட்டனர். மே மாதத்திற்குள், ஈராக்கின் ராணுவம் தோற்கடிக்கப்பட்டு அதன் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. சதாம் ஹுசேன் பின்னர் கைது செய்யப்பட்டு, விசாரணை செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டார். இருப்பினும், ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

2004இல், நாட்டில் ஒரு மதவாத கிளர்ச்சி சூழ்ந்தது. பிந்தைய ஆண்டுகளில், ஈராக்கின் சுன்னி மற்றும் ஷியா முஸ்லிம் பிரிவுகளுக்கு இடையே உள்நாட்டுப் போர் வெடித்தது. அமெரிக்க துருப்புக்கள் ஈராக்கில் இருந்து 2011இல் தான் வெளியேறின.

2003 மற்றும் 2011 இற்கு இடையில் 4,61,000 பேர் ஈராக்கில் போர் தொடர்பான காரணங்களால் இறந்ததாகவும், போருக்கு 3 ட்ரில்லியன் அமெரிக்க டாலர்கள் செலவானதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

ராயல் யுனைடெட் சர்வீசஸ் இன்ஸ்டிடியூட் சிந்தனைக் குழுவின் டைரக்டர் ஜெனரல் டாக்டர் கரின் வான் ஹிப்பல் கூறுகையில், 'இந்தப் போரினால் அமெரிக்கா நிறைய நம்பகத்தன்மையை இழந்துவிட்டது.

'இருபது ஆண்டுகளுக்குப் பிறகும் நாங்கள் ஏன் அமெரிக்க உளவுத்துறையை நம்ப வேண்டும் என மக்கள் சொல்வதை நீங்கள் இன்னும் கேட்கலாம்," என்கிறார். ●

# ஆனையிறவில் ஆடும் சிவன்

நிலாந்தன்

யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் ஆனையிறவுக்கு அருகே,கண்டி வீதியில் தட்டுவன்கொட்டிச் சந்தியில் ஒரு நடராஜர் சிலை நிறு வப்பட்டிருக்கிறது. கரைசிப்பிரதேச சபையின் ஒழுங்கமைப்பில் புலம்பெயர்ந்த தமிழர்களின் உதவியோடு 27 அடி உயரமான அந்தச் சிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இலங்கைத்தீவில் உள்ள மிக உயரமான நடராஜர் சிலை அதுவென்று கூறலாம்.

2009க்கு பின் ஆனையிறவுப் பிரதேசம் யுத்த வெற்றிவாதத்தின் உல்லாசத் தலங்களில் ஒன்றாக மாற்றப்பட்டிருக்கிறது. தமிழ் மக்களின் பண்பாட்டு தலைநகரமாகிய கவர்ச்சிமிகு யாழ்ப்பாணத்துக்குள் நுழையும் எவரும் முதலில் ஆனையிறவில் அமைக்கப்பட்டிருக்கும் இரண்டு யுத்த வெற்றி வளாகங்களைக் கடந்துதான் உள்ளேவர வேண்டும். அதாவது யுத்த வெற்றி உங்களை வரவேற்கிறது என்று பொருள். இது எங்களால் வெற்றி கொள்ளப்பட்ட நிலம் என்று பொருள்.

யாழ்ப்பாணத்துக்குள் நுழையும் பொழுது குடாநாட்டின் கழுத்துப் பகுதியில் முதலில் தென்படுவது விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தோல்வியுற்ற படை நடவடிக்கை ஒன்றின்போது பயன்படுத்தப்பட்ட உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஒரு கவச வாகனம். அதற்கருகில் அந்தக் கவச வாகனத்தை தடுத்து நிறுத்திய படை வீரர் ஒருவரின் நினைவுச் சின்னம். அதோடு சேர்த்து ஒரு விருந்தகம். அதைச் சற்றுத் தாண்டிச் சென்றால் வலது பக்கத்தில் கடலேரியின் பின்னணியில் பிரம்மாண்டமான ஒரு யுத்த வெற்றிச்சின்னம் உண்டு. இலங்கைத்தீவை நான்கு கைகள் ஏந்தியிருப்பது போன்ற அந்த யுத்த வெற்றிச் சின்னந்தான் யாழ்ப்பாணத்துக்குள் நுழையும் வெளியாட்களை வரவேற்கின்றது. அதாவது யுத்த வெற்றி உங்களை வரவேற்கிறது என்று பொருள்.

இவ்வாறு கடலேரியின் உப்புக் காற்றில் எப்பொழுதும் யுத்த வெற்றி வாடை வீசும் ஒரு பிரதேசத்தில், தமிழ் மக்களின் வழிபாட்டுருக்களில் ஒன்றாகிய நடராஜர் சிலையை நிறுவியமை என்பது அரசியல் அர்த்தத்தில் கவனிக்கப்பட வேண்டியது.

அச்சிலையின் அழகியல் அம்சங்களைக் குறித்தும் அது பார்த்த உடனேயே கையெடுத்துக் கும்பிடக்கூடிய ஒரு சிலையாக இருக்கிறதா இல்லையா என்பதைக் குறித்தும் பின்னர் தனியாக ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறேன். இன்று இக்கட்டுரையில் நான் கூறவருவது அச் சிலைக்குப் பின்னால் இருக்கும் பிரதேச, பிராந்திய மற்றும் கட்சி அரசியலைப் பற்றி.

நாவற்குழிச் சந்தியை போலவே ஆனையிறவிலும் அதாவது யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் தமிழ் மக்களை அடையாளப்படுத்தும் கட்டுமானங்கள் அவசியம். அரசாங்கம் அதைத் திட்டமிட்டு யுத்தவெற்றி வாசலாகக் கட்டியெழுப்பி வைத்திருக்கிறது. தமிழ்மக்கள் அதனை ஒரு மரபுரிமை வாசலாக மாற்ற வேண்டும். அந்த அடிப்படையில் சிந்தித்து கரைச்சி பிரதேச சபை முடிவெடுத்திருந்திருந்தால் அது வரவேற்கத்தக்கதே.

நாவற்குழியில் ஒரு புத்த விகாரை கட்டியெழுப்பப்பட்டுவரும் ஒரு நிலக்காட்சியில்,சிவபூமி அறக்கட்டளையின் அருங்காட்சியகமும் திருவாசக அரண்மனையும் கட்டப்பட்டிருப்பதுபோல, ஆனையிறவிலும் யுத்தவெற்றி வாசலை எதிர்நோக்கி ஒரு மரபுரிமை வாசலை சிருஷ்டிக்க வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களுக்கு உண்டு.

ஆனால் அந்த மரபுரிமைக் கட்டமைப்பானது எப்படி அமைய வேண்டும்? அது சிங்கள பௌத்த சின்னங்களுக்கு எதிராக சைவச் சின்னங்களை முன் நிறுத்தும் ஒன்றாக அமைய வேண்டுமா? அல்லது தமிழ்த் தேசியத்தின் மதப்பல்வகைமையை பிரதிபலிக்கும் ஒன்றாக அமைய வேண்டுமா?

சிவபூமி அறக்கட்டளை ஒரு சமய நிறுவனம். அது தான் போற்றும் ஒரு சமயத்தை முன்னிறுத்தும். ஆனால் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் அப்படிச் சிந்திக்கத் தேவையில்லை. மேலும் பொதுவெளிச் சிற்பம் வேறு, மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் விக்கிரகம் வேறு. இரண்டையும் ஒன்றாகக் கண்டு மயங்கும் பொதுப்புத்தியை அரசியல்வாதிகள் இலகுவாகக் கையாள்வார்கள்.



இந்தியாவை மீறி எந்த ஒரு வெளிச்சக்தியும் ஈழத் தமிழர்களுக்கு ஒரு தீர்வைத் தரமுடியாது. இப்பிராந்திய யதார்த்தத்துக்கூடாக சிந்திக்கும்போது ஈழத்தமிழர்கள் பாரதிய ஜனதா அரசாங்கத்தைத்தான் அணுகவேண்டும். ஆனால் அதன் பொருள் தமிழ் தேசியத்தின் மதப்பல்வமையை பலியிட வேண்டும் என்பதல்ல.

பிரயோக தேசியவாதமும் நடைமுறையில் பொதுப்புத்தியின் மீதே கட்டியெழுப்பப்படுகிறது. ஆனால், தேசியவாதத்தின் உள்ளடக்கம் ஜனநாயகமாக இருக்க வேண்டும் என்று மேற்கத்திய அறிஞர்கள் கூறுவார்கள். அதாவது ஜனநாயக அடிச்சட்டத்தின் மீதுதான் ஒரு மக்களைத் திரளாகக் கூட்டிக் கட்டவேண்டும். இதை இன்னும் ஆழமாக சொன்னால், ஒருவர் மற்றவருக்கு சமம் என்ற அடிப்படையில் மக்களைத் திரட்டவேண்டும். இதை இன்னும் நடைமுறை வார்த்தைகளில் சொன்னால், ஒரு மதம் இன்னொரு மதத்திற்கு சமம் ஒரு பிரதேசம் இன்னொரு பிரதேசத்துக்கு சமம் யாரும் பிரதேச ரீதியாகவோ சாதி ரீதியாகவோ மத ரீதியாகவோ ஒருவர் மற்றவருக்கு மேலானவரும் அல்ல் கீழானவரும் அல்ல என்ற அடித்தளத்தின் மீதுதான் ஒரு மக்களைத் திரளாகக் கூட்டிக்கட்ட வேண்டும். எனவே தேசியவாதம் எனப்படுவது மதப்பல்வகைமையின் மீதே கட்டியெழுப்பப்பட வேண்டும். மத மேலாண்மையின் மீது அல்ல. இந்த அடிப்படையில் சிந்தித்து தமிழ்மக்கள் தமது மரபுரிமைச் சின்னங்களை பாதுகாக்கவும் முன்நிறுத்தவும் வேண்டும்.

ஒவ்வொரு மதப்பிரிவும் அதனதன் மதச்சின்னங்களை முன்னிறுத்துவதில் தவறில்லை. அது அந்த மதத்தின் கூட்டுரிமை. ஆனால் ஒரு மதம் இன்னொரு மதத்தை அவமதிக்கும்போது அல்லது அந்த மதச் சின்னங்களை அழிக்கும்போது அல்லது ஒரு மதத்தின் மேலாண்மையை நிறுவ முற்படும் போதுதான் பிரச்சினை வருகிறது. அதாவது மதப்பல்வகைமை வேறு. மத மேலாண்மை வேறு.

அண்மை ஆண்டுகளாக தாயகத்திலும் புலம்பெயர்ந்த தமிழ்ப் பரப்பிலும் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் இந்திய மத்திய அரசை அணுகுவதற்கு மதத்தை ஒரு வாகனமாக பயன்படுத்த முயற்சிப்பது தெரிகிறது. இதில் சில தமிழ் அரசியல்வாதிகளும் அடங்குவர். இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் மதசார்பு நிலைப்பாட்டைப் பின்பற்றி அதன் மூலம் இந்திய மத்திய அரசாங்கத்தை அணுக முடியுமா என்று மேற்படி தரப்புக்கள் சிந்திக்கின்றன. பாரதிய ஜனதா அரசாங்கமானது இந்திய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்று. எனவே ஈழத் தமிழர்கள் அந்த அரசாங்கத்தைத்தான் அணுக வேண்டும். ஆனால் அதன் பொருள் இந்தியாவின் உள்நாட்டு அரசியலில் பாரதிய ஜனதா பின்பற்றும் அதே நிகழ்ச்சி நிரலை ஈழத் தமிழர்களும் பின்பற்ற வேண்டும் என்றில்லை.

இப்பிராந்தியம் இந்தியாவின் செல்வாக்கு மண்டலத்துட் காணப்படுகிறது. இந்தியாவை மீறி எந்த ஒரு வெளிச்சக்தியும் ஈழத் தமிழர்களுக்கு ஒரு தீர்வைத் தர முடியாது. இப்பிராந்திய யதார்த்தத்துக்கூடாக சிந்திக்கும்போது ஈழத்தமிழர்கள் பாரதிய ஜனதா அரசாங்கத்தைத்தான் அணுகவேண்டும். ஆனால் அதன் பொருள் தமிழ் தேசியத்தின் மதப்பல்வமையை பலியிட வேண்டும் என்பதல்ல.

ஈழத்தமிழர்களின் நவீன அரசியல் எனப்படுவது மதப்பல்வகமையின் மீதே கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. பெருமளவு இந்துக்களைக் கொண்ட ஈழத் தமிழ்ச் சமூகத்தில் முதலில் தோன்றிய இளையோர் அமைப்பாகிய யாழ்ப்பாண வாலிபர் முன்னணியை உருவாக்கியது (1924) ஒரு புரட்டஸ்தாந்து கிறிஸ்தவராகிய கன்டி பேரின்பநாயகந்தான்.

தமிழரசுக் கட்சி உருவாக்கப்பட்டபோது, அதன் கால்கோல் விழா 1949ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி மாவட்டபுரம் கந்தசாமி கோவில் முன்றலில் துரைசாமிக் குருக்களின் ஆசியுடன் இடம் பெற்றது. இதுதொடர்பான தகவல்களை தமிழரசுக் கட்சியின் வெள்ளி விழா மலரில் காணலாம். அக்கட்சியின் தலைவராகிய செல்வநாயகம் ஒரு புரட்டஸ்தாந்துக் கிறிஸ்தவர். செல்வநாயகத்தை ஈழத்தமிழர்கள் தந்தை என்றும் ஈழத்துக் காந்தி என்றும் அழைத்தார்கள். தந்தை செல்வா இறந்தபோது அவருடைய உடல் கிறிஸ்தவ முறைப்படி அடக்கம் செய்யப்படவில்லை. இந்து முறைப்படி வேட்டி அணிவிக்கப்பட்டு, தகனம் செய்யப்பட்டது. தன்னைத் தலைவராக தெரிந்தெடுத்து,தந்தை என்று அழைத்த பெரும்பான்மை இந்து வாக்காளர்களை கௌரவிப்பதற்காக செல்வநாயகம் அவ்வாறு கேட்டுக் கொண்டதாக கருதப்படுகிறது.

எனவே ஈழத்தமிழர்களின் நவீன அரசியலானது மதப் பல்வகமையின் மீதுதான் கட்டியெழுப்பப்பட்டது. அதை இப்பொழுது ஒரு மதத்துக்கு மட்டும் உரியதாக குறுக்கக் கூடாது. குறிப்பாக நவீன யாழ்ப்பாணம் எனப்படுவது திருச்சபைகளுக்கும் ஆறுமுகநாவலர் போன்ற மதப் பெரியார்கள் மற்றும் இந்துபோர்ட் போன்ற இந்து அறக்கட்டளைகளுக்கும் இடையிலான போட்டியின் திரண்ட விளைவுதான். ஆனால் அந்தப் போட்டியானது மத விரோதமாக, மோதலாக மாறவில்லை.

ஆனால்,2009க்குப் பின் எந்த ஒரு மதத் தலைவரும் துணிந்து கதையாத ஒரு வெற்றிடத்தில், ஒற்றைக் குரலாக ஒலித்த, முன்னாள் ஆயர் ராயப்பு ஜோசப் அவர்களுடைய அதே மறை மாவட்டத்தில் இந்துக்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையிலான முரண்பாடு தூக்கலாகத் தெரிவது தமிழ்த் தேசியத் திரட்சிக்குப் பாதகமானது. தமிழ்த் தேசியத்தை மதப்பல்வகைமையின் மீது கட்டியெழுப்ப விரும்பும் எல்லாச் சக்திகளும் அந்த முரண்பாட்டைத் தீர்க்க முயற்சிக்க வேண்டும்.

அவ்வாறு அகமுரண்பாடுகளைத் தீர்க்கும் சக்திமிக்க சிவில் அமைப்புகளோ கட்சிகளோ இல்லாத அரசியல் மற்றும் ஆன்மீக வெற்றிடத்தில், இன்னொருபுறம், சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தின் “எல்லைக் கற்களாக” புத்தர் சிலைகள் நிறுவப்பட்டு வருமோர் ராணுவ அரசியற் சூழலில், தமிழ் மக்கள் மத்தியிலும் இரவோடிரவாகச் சிலைகள் முளைக்கத் தொடங்கிவிட்டன. இவ்வாறான சிலை அரசியலின் பின்னணியில், ஆனையிறவில் நடராஜர் சிலை நிறுவப்பட்டுள்ளது.

சிவ நடனத்துக்கு ஆன்மீக வியாக்கியானம் மட்டுமல்ல, பௌதீகவியல் வியாக்கியானமும் உண்டு. அது ஒரு பிரபஞ்ச நடனம் என்று வர்ணிக்கப்படுகிறது (cosmic dance). ஆனையிறவுச் சிவனுக்கு மேலதிகமாக ஓர் அரசியல் பரிமாணமும் உண்டு. உப்புக் காற்றில் யுத்த வெற்றிச் சின்னங்களின் மத்தியில், சிவனார் யாருடைய பஜனைக்கு ஆடப்போகிறார்? ●

# புலஸ்தினி நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு உதவி; கைது செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரிக்குப் பிணை!

மட்டக்களப்பு, மார்ச் 22

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் முக்கிய சூத்திரதாரியாக சந்தேகிக்கப்படும் புலஸ்தினி மகேந்திரன் (ஸாரா ஜஸ்மின்) என்பவரை இந்தியாவிற்கு தப்பிச் செல்ல தனது வாகனத்தில் ஏற்றிச் சென்ற குற்றத்திற்காக சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு மூன்று வருடங்களாக சிறையில் இருந்த தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதியினால் கடந்த திங்கட்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டார்.

குறித்த பொலிஸ் பொறுப்பதிகாரியான நாகூர்த்தம்பி அபூபக்கர் என்பவர் புலஸ்தினி மகேந்திரன் தொடர்பான தகவலைத் தெரிந்தும் அதனை மறைத்தமை தொடர்பிலும் அவரை நாட்டை விட்டு தப்பிச் செல்வதற்கு உடந்தையாக இருந்த குற்றத்திற்காகவும் 13.07.2020ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 9 மாதங்கள் தடுப்புக்காவில் வைக்கப்பட்டு 08.04.2021 இல் கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார்.

தான் செய்யாத குற்றத்திற்காக கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கின்றமையானது தனது அடிப்படை உரிமையை மீறியுள்ளதாகக் கூறி பொலிஸ் பொறுப்பதிகாரி நாகூர்த்தம்பி அபூபக்கர் 2021 ஜூன் மாதம் 29ம் திகதி உயர்நீதிமன்றில் அவரது சட்டத்தரணியும் மனித உரிமை செயற்பாட்டாளருமாகிய ஏ. எல். ஆஸாதினூடாக அடிப்படை உரிமை வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்நிலையில் சுமார் 32 மாதங்களாக தடுப்புக்காவலிலும் விளக்கமறியலிலும் வைக்கப்பட்டிருந்த பொலிஸ் பொறுப்பதிகாரி நாகூர்த்தம்பி அபூபக்கர் கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதபதி என். எம். எம். அப்துல்லாஹ்வினால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அரச சார்பில் தோன்றிய அரச சட்டத்தரணி ஸக்கி இஸ்மாயில் குறிப்பட்ட நபருக்கு பிணை வழங்கப்படுவதற்கு எதிராக தனது கடுமையான ஆட்சேபனை தெரிவித்திருந்தார். இருந்த போதிலும் பொலிஸ் பொறுப்பதிகாரி நாகூர்த்தம்பி அபூபக்கர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி என். எம். ஷஹீட், சட்டத்தரணிகளான ஏ.எல்.ஆஸாத், சலாஹூதீன் சப்ரின் மற்றும் பாத்திமா பஸீலா ஆகியோர் செய்த சமர்ப் பணங்களை ஆராய்ந்த நீதிபதி பொலிஸ் பொறுப்பதிகாரி நாகூர்த்தம்பி அபூபக்கர் ஐ பிணையில் விடுதலை செய்தார்.

(அ)

# 5 வயது சிறுமி துஷ்பிரயோகம் தாத்தாவுக்கு பொலிஸார் வலை!

கொழும்பு, மார்ச் 22

5 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் சிறுமியின் தாத்தா முறையானவரை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சிறுமி மீதான பாலியல் வன்கொடுமை தொடர்பில் சிறுமியின் தாயார் பொலிஸில் நேற்று செய்த முறைப்பாட்டின் பிரகாரமே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் சிறுமியின் தாயாரின் மாமாவான சந்தேகநபர் சிறுமியை துஷ்பிரயோகம் செய்தார் என்று தெரிவிக்கப்பட்டதாக ஆராச்சிக்கட்டுவை பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக ஹலவத்தை பொது பொது மருத்துமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)



# வாய்ச் சுகாதார தினம் மட்டக்களப்பில்

மட்டக்களப்பு, மார்ச் 22

சர்வதேச சுகாதார தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் மாபெரும் விழிப்புணர்வு ஊர்வலமும் வாய் பரிசோதனை முகாமும் நேற்று இடம்பெற்றது.

'புன்னகைப்பதற்காக உங்கள் வாய்ச்சுகாதாரத்தையும் பல் சுகாதாரத்தையும் எண்ணி நீங்கள் ஆடம்பரப்படுங்கள்' என்ற தொனிப்பொருளில் 2023ஆம் ஆண்டுக்கான சர்வதேச வாய்ச் சுகாதார தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

சுகாதார அமைச்சு மற்றும் தேசிய பல் வைத்திய அதிகாரிகள் சங்கம் ஆகியவற்றின் அனுசரணையுடன் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலை இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை ஆகியவற்றிலிருந்து இரண்டு விழிப்புணர்வு பேரணியானது ஆரம்பமாகி மட்டக்களப்பு நகர் ஊடாக வருகை தந்து மட்டக்களப்பு பிரதான பஸ் நிலையத்திற்கு முன்பாக நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் மருத்துவர் கே. சுகுணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையின் பிரதிப் பணிப்பாளர், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பல்நோயியல் பிரிவு பொறுப்பதிகாரி பல் வைத்திய நிபுணர் கே.முரளிதரன் உட்பட வைத்தியர்கள்,தாதியர் கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு பிரதான பஸ் நிலையத்தில் நடமாடும் பல் சிகிச்சை வாகனத்தில் அரச மற்றும் தனியார் பஸ்களின் சாரதிகள்,ஓட்டோ சாரதிகளின் வாய்கள் சோதனைக்குட்படுத் தப்பட்டு சிறியளவிலான சிகிச்சைகள் வழங்கப்பட்ட அதேநேரம் மேலதிக சிகிச்சைகளுக்குள்ளாக்கப்பட வேண்டியவர்கள், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (அ)

CHANNEL-1

**22.03.2023**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

CHANNEL - 2

**22.03.2023**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



## சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஷம்ஸ் ம.வியில் பற்சிகிச்சைப் பிரிவு திறந்து வைக்கப்பட்டது

அம்பாறை, மார்ச் 22

உலக வாய் சுகாதார தினத்தை முன்னிட்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட பற்சிகிச்சைப் பிரிவு மழ்ஹருஸ் ஷம்ஸ் மகா வித்தியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

தேசிய ரீதியில் அனுஷ்டிக்கப்பட்ட இந்நிகழ்வுகள் கொழும்பு, பதுளை, கல்முனை ஆகிய 3 இடங்களில் இடம்பெற்றன.

கல்முனையில் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய நிகழ்வு இப்பாடசாலையில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

"நலமான வாய் பெருமை ஆயுள் நீள புன்னகை" எனும் தொனிப் பொருளில், பாடசாலை அதிபர் றிப்கா அன்சார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிமனையின் பணிப்பாளர் மருத்துவர் இஸட். எல். எம். றிபாஸ், பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஏ.டபிள்யூ. வாஜித், பிராந்திய பல் வைத்திய அதிகாரி மருத்துவர் எம்.யூ. எம் சறூக், சாய்ந்தமருது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் எம். ஜே.கே.எம்.ஏ. அர்ஷாத் காரியப்பர், பொத்துவில் ஆதார வைத்தியசாலை வைத்தியர் ரஜாப், சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ.எல்.எம். அஸ்வத், பிராந்திய சுகாதார பணிமனையின் நடமாடும் பற்சிகிச்சை வைத்திய நிபுணர் பைறூஸ், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் உயிரியல் மருத்துவ பொறியியலாளர் என். எம். இப்ஹாம், ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளரும் சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளருமான என்.எம்.ஏ.மலிக் உட்பட கல்லூரியின் பிரதி அதிபர், பகுதித் தலைவர்கள், ஆசிரிய, ஆசிரியைகள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர், தாதியர்கள் எனப்பலரும் கலந்து சிறப்பித்தனர்.

(அ)

## பகிர்வோம், மகிழ்வோம் நிகழ்ச்சி



திருமலை, மார்ச் 22

திருகோணமலை சேகர மெதடிஸ்ட் தேவாலயங்கள் சார்பில், "பகிர்வோம், மகிழ்வோம் நிகழ்ச்சி" திருகோணமலை, மொரவெவ செயலாளர் பிரிவில் உள்ள அவ்வை நகர் தமிழ் மகா வித்தியாலயத்தில், அருட்திரு தேவகுமார் தலைமைமையில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

திருகோணமலை சேகர மெதடிஸ்த திருச்சபை உறுப்பினர்கள் மற்றும் அருட் பணியாளர்களால் பாடசாலை மாணவர்களுக்கு 130,000 ரூபாய் மதிப்புள்ள பாடசாலை உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டன.

இந்த நிகழ்வால் தரம் 6 இல் இருந்து 11 வரை கற்கும் 43 மாணவர்கள் பயனடைந்தனர்.

(அ)

## திருகோணமலை பேருந்து நிலையத்தில் இருவர் கைது

திருமலை, மார்ச் 22

திருகோணமலை பேருந்து நிலையத்தில் வைத்து ஜெலிக்னைட் குச்சிகளை வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் ஓட்டோவில் பயணித்தபோதே சிக்கியதுடன், 58 வோட்டர் ஜெலிக்னைட் குச்சிகள் இவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள், 33 மற்றும் 34 வயதுடைய நிலாவெளி மற்றும் திருகோணமலை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சந்தேகநபர்கள் திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

(அ)

# மட்டக்களப்பு பூநொச்சிமுனை பாலம் திருத்தப்படாமையால் மக்கள் அவதி!



மட்டக்களப்பு, மார்ச் 22

மட்டக்களப்பு பூநொச்சிமுனை பாலம் திருத்தப்படாமையால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

குறித்த வீதியினூடாக சுமார் 5000 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இலகுவாக பஸ்ஸில் செல்வ தற்கு வசதி செய்யப்பட்டிருந்த பாதையாகவும் இது கருதப்படுகிறது.

இது தவிர இப்பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களும் இலகுவாக நகர பாடசாலைகளுக்கு செல்வதற்கு வசதி செய்யப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

இப் பாதை முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளதால் தமது கருமங்களை முடித்துக் கொள்வதற்காக அதிக பணம் செலவு செய்து நீண்ட பாதை ஊடாக பயணிக்கவேண்டி இருப்பதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பகுதி வறிய மக்களின் பிரதான பாதையாக கருதப்படுகின்ற இப்பாதையின் பாலத்தை திருத்தம் செய்து தருவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டு மென இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இப்பாலம் இடிந்து சுமார் இரண்டு வருட காலத்தை கடந்துள்ளபோதிலும் இப்பிரதேசத்திற்கு வருகை தந்த அரசியல்வாதிகளோ அரசியல் அதிகாரம் படைத்தவர்கள் எவரும் இதனை திருத்த கவனம் செலுத்தவில்லை என்றும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தப் பாலத்தின் திருத்த வேலை பிரதேச மக்களுக்கு அத்தியாவசிய தேவையாக கருதப்படுவதனால் விரைவாக இந்தப் பாலத்தை திருத்தி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராத யகம்பத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(அ)

# பாரம்பரிய வைத்தியர்களுக்கான ஐந்து நாள்கள் பயிற்சி செயலமர்வு





மட்டக்களப்பு, மார்ச் 22

கொழும்பு சுகாதார அமைச்சின் சுதேச வைத்தியப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட, பாரம்பரிய வைத்தியர்களுக்கான 5 நாள் பயிற்சி செயலமர்வின் ஆரம்பநாள் நிகழ்வு நேற்று முன்தினம் மட்டக்களப்பு - புதுக்குடியிருப்பு சித்த தள ஆயுள்வேத வைத்திய சாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

கொழும்பு சுதேச வைத்தியப் பிரிவின் தலைவர் பி.தயாநந்தன் தலைமையில் ஆரம்பமான இச்செயலமர்வில், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதர், கல்முனை பிராநதிய ஆயுள்வேத இணைப்பாளரும் வைத்திய அத்தியட்சகருமான வைத்தியர் எம்.ஏ.நபீல், அமைச்சின் சுதேச வைத்தியப் பிரிவின் வைத்தியர் சி.சிவகுமார், கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள திட்டமிடல் பிரிவு வைத்தியர் எஸ். சதீஸ் உள்ளிட்ட வைத்தியர்களும், கிழக்கு மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத பாரம்பரிய வைத்தியர்கள், அமைச்சின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

ஆரம்பநாள் பயிற்சியின் வளவாளர்களாக கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.சிறிதர் கலந்து கொண்டு பாரம்பரிய மருத்துவத்தின் வரலாறும், இன்றைய நிலை பற்றி தெளிவான விளக்கப் பயிற்சியினையும், கல்முனை பிராந்திய ஆயுள்வேத இணைப்பாளரும் வைத்திய அத்தியட்சகருமான வைத்தியர் எம்.ஏ.நபீலினால் இன்றைய உணவு முறைகளும், அதன் ஆரோக்கியம் பற்றிய விளக்க பயிற்சியையும் வழங்கினர்.

கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத பாரம்பரிய வைத்தியர்களின் அறிவுத்திறன்களை மேம்படுத்தும் நோக்கிலும், அவர்களின் வைத்திய முறைகளை எவ்வாறு கடைப்பிடித்துச் செல்லவேண்டும் என்ற பயிற்சிகளும் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

(அ)

## பொலிஸாரை தாக்கியவர் கைக்குண்டுடன் சிக்கினார்

மட்டக்களப்பு, மார்ச் 22

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதி பிரதேசத்தில் விசாரணைக்கு சென்ற பொலிஸார் மீது தாக்குதலை நடத்தி தப்பிச் சென்றவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கைக்குண்டு ஒன்றுடன் கைது செய்யப்பட்டார் என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்

சம்பவ தினமான ஞாயிற்றுக்கிழமை காலை பொலிஸாரின் 119 அவசரசேவைப் பிரிவுக்கு தன்னை தனது கணவர் அடித்து துன்புறுத்துவதாக ஆரையம்பதி கிழக்கு பிரதேசத்தில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்துள்ளது.

இதனையடுத்து, இரு பொலிஸார் வாகனத்தில் விசாரணைக்காக அந்த வீட்டுக்குச் சென்றபோது அங்கு இருந்த வீட்டின் உரிமையாளரான மனைவியை தாக்கியநபர் பொலிஸார் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இதனையடுத்து காயமடைந்த இரு பொலிஸாரும் ஆரையம்பதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், அங்கிருந்து ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்த நிலையில் தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பி ஓடிய நபரை ஞாயிறு இரவு கைக்குண்டு ஒன்றுடன் கைது செய்துள்ளதாகவும் அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்த காத்தான்குடி பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ)

### வாக்களிப்பின்றியே ஓய்வூதியச் சட்டம் நிறைவேறியதால் பிரான்ஸில் பதற்றம்!

# நகரங்களில் இரவிரவாக ஆர்ப்பாட்டம், வன்முறை ஒன்பது வாக்குகளினால் தப்பிப் பிழைத்தது அரசு

பாரிஸ், மார்ச் 22

**பிரான்ஸின் அரசமைப்பின் 49.3 ஷரத்தின் கீழ் அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணைகள் தோல்வியடைந்ததை அடுத்து அதே அரசமைப்பு விதிகளின் கீழ் ஓய்வூதியத் திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு இன்றியே நிறைவேறியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.**





சர்ச்சைக்குரிய சட்டமூலம் நாட்டின் அரசமைப்பின் கீழ் தற்சமயம் சட்டமாக்கப்பட்டு விட்ட போதிலும் அதற்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன. எலிசபெத் போர்னின் அரசைக் கவிழ்க்க எதிர்க் கட்சிகள் முன்வைத்த பிரேரணைகள் நேற்று முன் தினம் முன்னிரவு சபையில் தோல்வியடைந்த கையோடு

பாரிஸ் உட்பட நாட்டின் பிரதான நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் வெடித்தன. பாரிஸில் இளைஞர் குழுக்கள் ஆங்காங்கே வீதிகளில் பொலீஸாரோடு மோதியதால் இரவிரவாகப் பதற்றம் நிலவியது.

நகரில் சில இடங்களில் வீதிகளில் அகற்றப்படாமல் குவிந்துள்ள குப்பைக் கழிவுகளுக்குத் தீ மூட்டப்பட்டது.

பாராளுமன்றத்துக்கு அருகே வீதியில் இரவிரவாக ஒன்று திரள முயன்ற கூட்டத்தினரைப் பொலீஸார் தடுத்து வெளியேற்றினர். பாரிஸில் ஆர்ப்பட்டக் காரர்களை அடக்குவதற்குப் "பொலீஸ் வன்முறை" பயன்படுத்தப்பட்டுள்ளது என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. சுயாதீன ஊடகவியலாளர்கள் சிலர் தங்கள் சமூகவலைத் தளப் பதிவுகளில் பொலீஸ் வன்முறைக் காட்சிகளை வெளியிட்டுள்ளனர்.

இடதுசாரிகளது முழு ஆதரவுடன் முன்வைக்கப்பட்ட பிரேரணை வெறும் ஒன்பது வாக்குகளினாலேயே தோற்கடிக்கப் பட்டிருக்கிறது. ஒன்பது வாக்குகள் செல்வாக்கிலேயே இந்த அரசு பாதுகாக்கப்பட்டிருப்பது எதிர்க் கட்சிகளையும் அரசை எதிர்க்கின்ற நாட்டு மக்களையும் கடும் சீற்றமடையச் செய்துள்ளது. பிரதான எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் "அரசு செத்து விட்டது. அதன் ஆத்மா சாந்தி அடையட்டும் " என்று தெரிவித்திருக்கிறார். தீவிர வலதுசாரியான மரின் லூ பென், புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று அதிபர் மக்ரோனைக் கேட்டுள்ளார். இந்தப் பின்னணியில் அடுத்த கட்ட அரசியல் நகர்வுகளை முழு வீச்சில் தொடங்குதற்கு எதிர்க் கட்சிகளும், அடுத்த கட்ட நாடளாவிய அணிதிரள்வுகளுக்குத் தொழிற் சங்கங்களும் தயாராகிவருகின்றன.

அதிபர் மக்ரோன் பிரதமரையும் ஆளுங்கட்சித் தலைவர்களையும் எம்பிக்களையும் இன்று செவ்வாய்க்கிழமை எலிஸே மாளிகைக்கு அழைத்து முக்கிய கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார்.

பாராளுமன்றத்தைப் புறந்தள்ளிவிட்டு ஓய்வூதியச் சட்டத்தை தன் விருப்பப்படி நிறைவேற்றியதனால் மக்ரோன் ஜனநாயக வழிமுறைகளைத் தடுத்து எதேச்சாதிகாரமாகச் செயற்படுகிறார் என்று குற்றம்சாட்டப்படுவதால் அவர் மீது அழுத்தங்கள் அதிகரித்துள்ளன.

ஒன்பது ஆதரவு வாக்குகளால் தப்பிப் பிழைத்துள்ள - பெரும்பான்மை இல்லாத-ஓர் அரசை தொடர்ந்து பதவியில் தக்கவைத் திருப்பது அரசுத் தலைவருக்குப் பல அரசியல் நெருக்கடிகளை ஏற்படுத்தும். எனவே ஓய்வூதியச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் நாட்டு மக்களது சீற்றத்தைத் தணிப்பதற்காகவும் எதிர்க்கட்சிகளைச் சமாளிப்பதற்காகவும் அவர் பாராளுமன்றத்தைக் கலைக்கக் கூடும் என்ற எதிர்பார்ப்பும் அரசியல் வட்டாரங்களில் காணப்படுகிறது.

இதேவேளை, நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ள அடுத்த கட்ட வேலை நிறுத்தமும் பேரணிகளும் முழு உச்ச அளவில் நாட்டை முடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(அ)

# ரஷ்ய கலிபர் ஏவுகணைகளை ஏற்றிய ரயில் அழிக்கப்பட்டது!

## உக்ரைன் அரசு அறிவிப்பு

கீவ், மார்ச் 22

கிரிமியாவில் உள்ள ரஷ்யாவின் கருங்கடல் கடற்படைக்கு இரயில் மூலம் கொண்டு செல்லப்பட்ட பல ரஷ்யாவின் கலிபர் ஏவுகணைகள் அழிக்கப்பட்டதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

உக்ரைனின் இராணுவ ஏஜென்சி தாமதமாக பல கலிபர் குருஸ் ஏவுகணைகள் வெடிப்பால் அழிக்கப்பட்டதாகக் கூறியது. வெடிப்புக்கு உக்ரைன் தான் காரணம் அல்லது சக்தி வாய்ந்த ஏவுகணைகள் எவ்வாறு அழிக்கப்பட்டது என்பதை வெளிப்படையாகக் கூறவில்லை.

தற்காலிகமாக ஆக்கிரமிக்கப்பட்ட கிரிமியாவின் வடக்கே உள்ள ஜான்கோய் நகரில் ரஷ்ய கலிபர்-கே.என் குருஸ் ஏவுகணைகள் ரயில் மூலம் கொண்டு செல்லப்பட்டபோது அவை அழிக்கப்பட்டன என்று உக்ரைனின் உளவுத்துறை சமூக ஊடக இடுகைகளில் தெரிவித்துள்ளது.

ஏவுகணைகள் ரஷ்ய கருங்கடல் கடற்படையால் நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஏவுவதற்கு கொண்டு செல்லப்பட்டவை என்று நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஜான்கோய் நிர்வாகத்தின் ரஷ்ய-நிறுவப்பட்ட தலைவரான ஐவின், நகரம் ட்ரோன்களின் தாக்குதலுக்கு உள்ளாகியதாகவும், 33 வயதான ஒரு நபர் கீழே விழுந்த ட்ரோனின்



சிதைவால் காயத்தால் பாதிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

ரஷ்யாவால் நியமிக்கப் பட்ட கிரிமியாவின் ஆளுநர் செர்ஜி அக்செனோவ், உக்ரைனின் உளவுத்துறை ஏவுகணைகள் அழிக்கப்பட்டதாகக் கூறிய ஜான்கோய்க்கு அருகில் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் சுடப்பட்டதாக சமூக ஊடகங்களில் தெரிவித்தார். விழுந்து கிடக் கும் இடிபாடுகள் ஒருவரை காயப்படுத்தியதுடன் வீடு மற்றும் ஒரு கடையையும் சேதப்படுத்தியது என்று அக்ஸெனோவ் கூறினார்.

இந்த தாக்குதலில் ஏவுகணைகள் அழிக்கப்பட்டதை ரஷ்ய அதிகாரிகள் உறுதிப்படுத்தவில்லை. ஜான்கோய் வெடிப்பு சம்பவத்திற்கு முன்னர் ட்ரோன் இயந்திரங்களின் சத்தம் கேட்டதாக உக்ரைன் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

உக்ரைன் மீதான ரஷ்ய தாக்குதல்களில் கலிபர் குரூஸ் ஏவுகணைகள் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன.

(அ)

# ரஷ்யா சென்றார் ஜின்பிங்!

மொஸ்கோ, மார்ச் 22

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் உத்தியோகபூர்வ பயணமாக கடந்த திங்களன்று ரஷ்யா சென்றடைந்தார்.

ஜனாதிபதி விளாடிமிர் புடினுடனான சந்திப்பில், 2024 இல் நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்யர்கள் அவரை ஆதரவளிப்பார்கள் என்று அவர் நம்புவதாகக் கூறினார்.

போரிஸ் யெல்ட்சின் ராஜினாமா செய்த 1999 ஆம் ஆண்டின் கடைசி நாளில் பதவிக்கு வந்த புடின், ஜோசப் ஸ்டாலினுக்குப் பிறகு வேறு எந்தத் தலைவரையும்விட நீண்ட காலம் ரஷ்யாவை ஆட்சி செய்துள்ளார்.

"அடுத்த ஆண்டு உங்கள் நாட்டில் மற்றொரு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்று எனக்குத் தெரியும்," என்று கிரெம்ளினில் பேச்சின் தொடக்கத்தில் புடினிடம் ஜின்பிங் கூறினார்.

"உங்கள் வலுவான தலைமைக்கு நன்றி, சமீபத்திய ஆண்டுகளில் செழிப்பை அடைவதில் ரஷ்யா குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. உங்கள் நல்ல முயற்சிகளுக்கு ரஷ்ய மக்கள் உங்களுக்கு வலுவாக ஆதரவளிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்" என அவர் குறிப்பிட்டார்.

ஜின்பிங்கின் வார்த்தைகள் மாண்டரின் மொழியிலிருந்து ரஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டபோது, புடின் ஜின்பிங்கின் கண்களைப் பார்த்து சுருக்கமாகச் சிரித்தார்.

அவர் முதன்முதலில் ஆட்சிக்கு வந்தபோது, 1991 சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு ரஷ்யாவைப் பற்றிக் கொண்ட குழப்பத்தை முடிவுக்குக் கொண்டுவருவதாக புடின் சபதம் செய்தார், ஆனால் உக்ரைன் மீதான படையெடுப்பு அவரது ஆட்சியின் மிகப்பெரிய சவாலைத் தூண்டியுள்ளது.

1962 கியூபா ஏவுகணை நெருக்கடிக்குப் பின்னர் மேற்கத்திய நாடுகளுடன் கடுமையான மோதலுக்கு இந்தப் போர் வழிவகுத்தது, அதே நேரத்தில் ரஷ்யாவின் இராணுவம் உக்ரைனில் தொடர்ச்சியான தோல்விகளை சந்தித்துள்ளது. மேற்கு நாடுகள் ரஷ்யாவின் 2.1 ட்ரில்லியன் டொலர் பொருளாதாரத்தின் மீது எப்போதும் இல்லாத வகையில் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.

ரஷ்யாவுடனான சீனாவின் வரம்புகள் இல்லாத கூட்டணி மேற்கு நாடுகளுக்கு பீதியை கிளப்பியுள்ளது. சீனா ரஷ்யாவுக்கு ஆயுதங்களை வழங்குவது பற்றி பரிசீலிக்கும் என்று அமெரிக்கா கவலை கொண்டுள்ளது.

பீஜிங் அதை மறுத்துள்ளது. உக்ரைன் போரில் மேற்கு நாடுகள் குளிர்காய்வதாகவும் குற்றம் சாட்டியுள்ளது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கடந்த வெள்ளியன்று ரஷ்யாவின் உக்ரைன் மீதான படையெடுப்பின் போது உக்ரேனிய குழந்தைகளை ரஷ்யாவுக்கு நாடு கடத்தியது தொடர்பாக பிடியாணை பிறப்பித்த பின்னர், ரஷ்ய அதிபரை சந்தித்த முதல் தலைவர் ஜின்பிங்.

இந்த குற்றச்சாட்டு பல "தெளிவாக விரோதமான காட்சிகளில்" ஒன்று என்று ரஷ்யா கூறியது. அத்துடன், ஐ. சி. சி. வழக்கறிஞர் மற்றும் நீதிபதிகளுக்கு எதிராக ஒரு கிரிமினல் வழக்கைத் திறந் துள்ளது.

இந்த பிடியாணை இரட்டைத் தரத்தை பிரதிபலிப்பதாக பீஜிங் கூறியது.

(அ)

# இந்தியன் வெல்ஸ் தொடர் சம்பியன் அல்கராஸ் வசம்!



கலிபோர்னியா, மார்ச் 22

இந்தியன்வெல்ஸ் தொடரை கார்லோஸ் அல்கராஸ் கைப்பற்றினார்.

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள இந்தியன் வெல்ஸ் ரென்னிஸ் தொடர் நடைபெற்றது.

இதன் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் 2ஆம் நிலை வீரரான ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ், 6ஆம் நிலை வீரரான ரஷ்யாவின் டேனியல் மேத்வதேவை எதிர்த்து விளையாடினார்.

ஒரு மணி நேரம் 10 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கார்லோஸ் அல்கராஸ் 6-3, 6-2 என்ற நேர் செற்றில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார்.



# பிரான்ஸ் அணியின் தலைவராக எம்பாப்வே

பாரிஸ், மார்ச் 22

பிரான்ஸ் உதைபந்தாட்ட அணியின் புதிய தலைவராக கிலியன் எம்பாப்வே நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் ஆர் ஜென்ரீனாவிடம் பிரான்ஸ் தோல்வியடைந்தது. இதையடுத்து அந்த அணியின் தலைவர் ஹியூகோ லோறிஸ் சர்வதேச உதைபந்தாட்டத்திலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்தார், இந்நிலையில், புதிய தலைவராக கிலியன் எம்பாப்வே நியமிக்கப் பட்டுள்ளார் என்று பிரான்ஸ் உதைபந்தாட்ட சம்மேளனம் அறிவித்துள்ளது.

பயிற்றுநர் டெஸ்சாம்ப் ஸூடனான கலந்துரையாடலையடுத்து, அணித்தலைவர் பதவியை கிலியன் எம் பாப்பே ஏற்றுள்ளார்.

பிரான்ஸ் அணி எம்பாப் வேயின் தலைமையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நெதர்லாந்துடன் யூரோ 2024 கிண்ணப் போட்டியில் மோதவுள்ளது. பிரான்ஸில் இப்போட்டி நடைபெறும். உலகக் கிண்ண இறுதிப் போட்டி யின் பின்னர் பிரான்ஸ் பங்கு பற்றும் முதல் போட்டி இது வாகும். (ஐ)



# டில்லி அபார ஆட்டம் வீழ்ந்தது மும்பை!

மும்பை, மார்ச் 22

மகளிர் பிறீமியர் லீக் தொடரில் டில்லி கப்பிடல்ஸ் அணி மும்பை இந்தியன்ஸ் அணியை 9 விக்கெட்களால் வெற்றி கொண்டது.

இந்தத் தொடரில் மும்பை இந்தியன்ஸ் அடைந்த இரண்டாவது தோல்வி இதுவாகும்.

முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி, 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது. மும்பை 7ஆவது ஓவரில் 4 விக்கெட்களை இழந்து 21 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தடுமாறியது.

எனினும் அணித் தலைவி ஹார்மன்பிரீத் கோர் (23), பூஜா வஸ்த்ராக்கர் (26), இஸி வொங் (23), ஆமன்ஜோத் கோர் (19) ஆகிய நால்வரும் பொறுப்புடன் ஆடி அணி ஓரளவுக்கு போராடக்கூடிய இலக்கை எட்ட உதவினார்.

டில்லி கப்பிட்டல்ஸ் பந்துவீச்சில் மாரிஸ்ஆன் கெப், ஷிக்கா பாண்டி ஜெஸ் ஜோன்சன், ஆகியோர் தலா இரண்டு விக்கெட்களை கைப்பற்றினர்.

110 ஓட்டங்கள் என்ற சுமாரான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய டில்லி அணி அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 9 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 110 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

அணித் தலைவி மெக் லெனிங், ஷஃபாலி வர்மா ஆகியோர் 27 பந்துகளில் 56 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர்.

ஷஃபாலி வர்மா 15 பந்துகளில் 6 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 33 ஓட்டங்களைப் பெற்றார்.

அவர் ஆட்டம் இழந்த பின்னர் 2ஆவது விக்கெட்டுக்காக இணைந்த மெக் லெனிங், அலிஸ் கெப்சி ஆகிய இருவரும் அடுத்த 27 பந்துகளில் பிரிக்கப்படாத 54 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர்.

மெக் லெனிங் 22 பந்துகளில் 4 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸர் உட்பட 32 ஓட்டங்களுடனும் அலிஸ் கெப்சி 17 பந்துகளில் 5 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் 38 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காதிருந்தனர்.

# ரென்னிஸ் தரவரிசை பட்டியல் ஜெகோவிச் பின்தள்ளப்பட்டார்

லண்டன், மார்ச் 22

சர்வதேச ரென்னிஸ் தரவரிசை பட்டியல் நேற்று வெளியானது. இதில் கார்லோஸ் அல்கராஸ் ஓர் இடம் முன்னேறி 7,420 புள்ளிகளுடன் முதலிடத்தை பிடித்துள்ளார்.

சேர்பியாவின் நோவக் ஜொகோவிச், இந்தியன் வெல்ஸ் தொடரில் விளையாடாததால் முதலிடத்தை இழந்துள்ளார். அவர் 7,160 புள்ளிகளுடன் 2ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்.

காயம் காரணமாக அவுஸ்திரேலிய ஓபனில் 2ஆவது சுற்றுடன் வெளியேறிய ஸ்பெயினின் ரபேல் நடால் 13ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார். கடந்த 18 வருடங்களில் ரபேல் நடால் முதல் 10 இடங்களில் இடம்பெறாதது இதுவே முதன்முறை.

ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ் (கிரீஸ்), காஸ்பர் ரூட் (நார்வே), டேனியல் மேத்வதேவ் ( ரஷ்யா), பெலிக்ஸ் ஆகர்-அலியாசிம் (கனடா), ஆந்த்ரே ரூப்லெவ் (ரஷ்யா), ஹோல்கர் ரூன் (டென்மார்க்), ஹூபர்ட் ஹர்காக்ஸ் (போலந்து), ரெய்லர் பிரிட்ஸ் (அமெரிக்கா) ஆகியோர் முறையே 3 முதல் 10 இடங்களில் உள்ளனர். (ஐ)





# முஸ்பிஹுீர் ரஹ்மான் குறைந்த பந்துகளில் சதம்

டாக்கா, மார்ச் 22

60 பந்துகளில் சதம் அடித்து பங்களாதேஷின் முஸ்பிஹூர் ரஹ்மான் புதிய மைல்கல்லை எட்டினார்.

2ஆவது ஒருநாள் போட்டி நேற்று நடந்தது. இந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற அயர்லாந்து அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, முஷ்பிஹூர் ரஹிம் அதிரடி சதத்தால் 50 ஓவரில் 349 ஓட்டங்களை குவித்தது. மரண ஓவர்களில் அபாரமாக ஆடி 60 பந்துகளில் சதமடித்தார். இதில் 14 பௌண்ட்ரிகள் மற்றும் 2 சிக்ஸர்கள் அடங்கும்.

இதன்மூலம், ஒருநாள் கிரிக்கெட்டில் அதிவேக சதமடித்த பங்களாதேஷ் வீரர் என்ற சாதனையை முஷ்பிஹுஹூர் ரஹீம் படைத்துள்ளார். இந்த போட்டி மழை காரணமாக முடிவு இல்லை என அறிவிக்கப் பட்டது குறிப்பிடத்தக்கது.

# வரி அதிகரிப்பை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவே முடியாது!

## கூறுகின்றார் வாசுதேவ நாணயக்கார



**கொழும்பு, மார்ச் 22**

**தொழிற்சங்களை அரசாங்கமானது கலந்துரையாடலுக்கு அழைத்துள்ளமையானது தொழிற்சங்க போராட்டத்துக்கு கிடைத்த வெற்றி என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பு அதன் தலைமையகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது. இந்த சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- கடந்த 15ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க போராட்டமானது மக்கள் மத்தியில் பாரிய வெற்றியை பெற்றுள்ளது என்றே கூறவேண்டும்.

இந்த தொழிற்சங்கப் போராட்டதனை முடக்குவதற்காக அரசாங்கமானது வர்த்தமானியை வெளியிட்டது. பல்வேறு வழிகளில் அரச ஊழியர்களை அச்சுறுத்தியது.

எனினும் அரசாங்கத்தின் முயற்சிகள் அனைத்தும் தோல்வியடையும் வகையில் தொழிற்சங்க போராட்டமானது மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான அடிப்படை காரணங்களில் மக்களுக்கு பயனளிக்கும் பல்வேறு காரணிகளும் உள்ளன.

இதன் காரணமாகவே இந்த தொழிற்சங்க போராட்டமானது மக்கள் மத்தியில் வெற்றிபெற்ற தொழிற்சங்க போராட்டமாகக் காணப்படுகின்றது.

தொழிற்சங்கப் போராட்டத்துக்கு வரி அதிகரிப்பு மட்டும் காரணமில்லை.

மின் கட்டணம் ஒருபுறம் அதிகரிக்கப்படுகின்றது. அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிக்கப்படுகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் வரி அதிகரிப்பு என்பதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஒரு இலட்சம் ரூபாய் வருமானத்துக்கு வரி செலுத்துவது என்பது ஏற்புடைய விடயமல்ல.

உள்ளூராட்சிமன்ற தேர்தலை ஒத்திவைத்தமை, ஒடுக்குமுறைகளை அரங்கேற்றும் வகையில் போராட்டங்களை முடக்குகின்ற அரசாங்கத்தின் சகல செயற்படுகளையும் கண்டிக்கும் வகையிலேயே மிகவும் வெற்றிகரமான தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தொழிற்சங்கப் போராட்டம் வெற்றியடைந்ததன் காரணமாகவே, தொழிற்சங்கவாதிகளை அச்சுறுத்தும் செயற்பாட்டை அரசாங்கம் கைவிட்டுள்ளது.

கலந்துரையாடலினூடாக இந்தப் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு தாம் தயாராக இருப்பதாக அரசாங்கம் தற்போது அறிவித்தலொன்றை விடுத்துள்ளது. இந்த அறிவிப்புக்கூட தொழிற்சங்கப் போராட்டத்தின் வெற்றியாகவே நாம் கருதுகின்றோம்.

எவ்வித கலந்துரையாடலுக்கும் முன்வராத அரசாங்கமானது தற்போது கலந்துரையாடலுக்கு வருமாறு தொழிற்சங்கங்களுக்கு கடிதம் மூலம் அழைப்பு விடுத்துள்ளது-என்றார். (அ)

# இரண்டு பிரதான நிறுவனங்கள் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில்!

## சாகர காரியவசம் எம்.பி கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 20

இலங்கையில் அதிகாரத்தை பரவலாக்கம் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட பிரதான இரு நிறுவனங்களும் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கொண்டுவரப்பட்டுள் ளதாகவும் ஜனநாயகத்துக்கு மதிப்பளிக்கும் எவராலும் இந்த நிலைமையை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - உள்ளூராட்சிமன்றங்கள் என்பது அந்தந்த மன்றங்களின் ஆளுகைக்கு உட்பட்ட மக்களின் அன்றாட நடவடிக்கைகள், சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் வெவ்வேறு நடவடிக்கைகளில் தலையிடும் வகையில் அதிகாரமளிக்கப்பட்ட சிறிய அலகாகக் காணப்படுகின்றது.

அதிகாரப் பரவலாக்கத்தின் மற்றைய கட்டமைப்பான மாகாண சபைகள் நாட்டில் இயங்கி வருகின்ற போதிலும், அவை ஜனநாயகத்துக்கு விரோதமாக மக்கள் பிரதிநிதிகள் அல்லாத தரப்பினரால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒன்பது ஆளுநர்களே ஒன்பது மாகாணங்களை நிர்வகித்து வருகின்றனர். ஆனால், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளினாலேயே மாகாணசபைகளை சிறந்த முறையில் முன்கொண்டு செல்ல முடியும் என்பதை பொதுஜன பெரமுன தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது.

மாகாண சபைகள் தொடர்ந்து இயங்கினாலும் மக்கள் பிரதிநிதிகள் இல்லாமலேயே மாகாண சபைகள் இயங்கி வருகின்றன.

இவ்வாறான நிலையில் உள்ளூராட்சிமன்றங்களின் பதவி காலம் முடிவுக்கு வந்துள்ளது. இனி மக்கள் பிரதிநிதிகள் இல்லாமலேயே உள்ளூராட்சிமன்றங்கள் செயற்பட போகின்றன.

அரச அதிகாரிகளினூடாக உள்ளூராட்சிமன்றங்கள் செயற்படுத்தப்போகின்றன-என்றார். (அ)

# மகிந்த சிறிவர்தனவுக்கு ஏழு நாட்கள் அவகாசம்

## ஜீ.எல்.பீரிஸ் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 22

உள்ளூராராட்சித் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தை 7 நாட்களுக்குள் திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு வழங்காவிட்டால் அவருக்கு எதிராக அனைத்து எதிர்க்கட்சிகளும் உயர் நீதிமன்றத்தை நாடும் என்றும் அவர் கூறினார்.

நீதிமன்றத்தின் உத்தரவின் படி தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு பணத்தைச் செலுத்தாவிடின், நீதிமன்றத்தை அவமதித்ததாகக் கருதி அவருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கத் தாம் கோருவோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேநேரம் உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ள நிலையில் தேர்தல் தொடர்பில் நிச்சய மற்ற நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# நீர் வீழ்ச்சியில் மூழ்கி 4 இளைஞர்கள் மாயம்!



கொழும்பு, மார்ச் 22

வெல்லவாய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எல்லாவல நீர் வீழ்ச்சியில் குளிப்பதற்குச் சென்ற நான்கு இளைஞர்கள் நேற்று நீரில் மூழ்கி காணாமல்போயுள்ளனர்.

சுற்றுலா சென்ற 10 இளைஞர்கள் அந்த நீர்வீழ்ச்சியில் குளிப்பதற்காகச் சென்ற நிலையில், நான்கு பேர் நீரில் மூழ்கியுள்ளனர்.

கல்முனை மற்றும் சாய்ந்தமருது பிரதேசங்களில் வசிக்கும் 22 முதல் 23 வயதுக்குட்பட்ட நான்கு இளைஞர்களே காணாமல்போயுள்ளனர்.

இந்த இடத்தில் பல சந்தர்ப்பங்களில் 13 பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.


இதன் காரணமாக இந்த இடம் சுற்றுலாப் பயணிகளுக்கு சிறிது காலம் மூடப்பட்டிருந்ததாகவும், திறக்கப்பட்ட சிறிது நாட்களிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். (அ)

# வீடு எரிப்பு குறித்த விசாரணை தாமதம்

## கவலையுடன் கடிதம் அனுப்பினார் பிரசன்ன!

கொழும்பு, மார்ச் 22

கடந்த வருடம் மே மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற அமைதியின்மையின் போது உடுகம்பலையில் உள்ள தனது வீடு எரிக்கப் பட்டமை தொடர்பான முறைப்பாட்டினை விசாரணை செய்வதில் தாமதம் ஏற்பட்டமை தொடர்பில் கவலை தெரிவித்து நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு கடி தம் ஒன்றை அனுப்பியுள்ளார்.




மனித உரிமைகள் ஆணைக்குழுவில் விரைவில் ஆஜராகுவதற்கான திகதி மற்றும் நேரத்தை வழங்குமாறு நான்கு தடவைகள் எழுத்து மூலம் கோரியுள்ளதாக அவர் தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதற்கான சந்தர்ப்பத்தை விரைவில் வழங்கு மாறும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தனது கடிதத்தில் மேலும் கோரியுள்ளார். (அ)

# சம்பள நிர்ணய சபை உறுப்பினராக செந்தில் தொண்டமான் நியமனம்!

கொழும்பு, மார்ச் 22

சம்பள நிர்ணய சபைக்கு தொழிலாளர்களின் புதிய பிரதிநிதியாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் நியமிக்கப்பட்டுள்ளார்.



சம்பள நிர்ணய சபையின் 30 ஆவது ஒழுங்கு முறைக்கு அமையாக வெளியிடப்பட்டுள்ள புதிய வர்த்தமானிமூலம் சபையின் ஆயுட்காலம் 31.12.2023 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், புதிய பிரதிநிதியாக செந்தில் தொண்டமான் நியமிக்கப்பட்டுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் போதாதென இ.தொ.கா அரசாங்கத்திடம் முன்வைத்த கோரிக்கையின் பிரகாரம் வர்த்தமானி ஊடாக சம்பள நிர்ணய சபை புதிய உறுப்பினராக செந்தில் தொண்டமான் நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

## ஐ.எம்.எவ்...

பெரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டதாகவும், அந்த உறுதிமொழியின் அடிப்படையில் ஜனாதிபதியும் அரசாங்கமும் இணைந்து கடன் தொகையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது”, என்று மகிழ்ச்சியை ஐ. தே. க. ஆதரவாளர்கள் தெரிவித்தனர்.

மறுபுறத்தில், கடன் வாங்கியதற்கு வெடிகொளுத்தி மகிழ்ச்சி தெரிவித்த ஒரே நாடு இலங்கைதான் என்று மக்கள் விசனம் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## ஊழல்...

தொடர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்திஉள்ளார்.

இலங்கைக்கு விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் 300 கோடி டொலர்களை ஐ. எம். எவ். வழங்கவுள்ளது. இதற்கான நிறைவேற்று சபையின் அனுமதி தொடர்பாக அறிவித்த பின்னரே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“அதிக பணவீக்கம், குறைக்கப்பட்ட கையிருப்பு, நீடித்து நிலைக்க முடியாத பொதுக் கடன் மற்றும் உயர்ந்த நிதித்துறை பாதிப்புகளுக்கு மத்தியில் கடுமையான மந்தநிலையுடன் இலங்கை மிகப் பெரிய பொருளாதார மற்றும் சமூக சவால்களை எதிர்கொண்டுள்ளது. நிறுவனங்கள் மற்றும் நிர்வாக கட்டமைப்புகளுக்கு வலுவான சீர்திருத்தங்கள் தேவை. நெருக்கடியை சமாளிக்க இலங்கைக்கு, சீர்திருத்தங்களுக்கான வலுவான உரிமையுடன் விரிவாக்கப்பட்ட வசதியின் கீழான நிதி ஆதரவு வேலைத்திட்டத்தை விரைவாகவும் சரியான நேரத்தில் அமுல்படுத்துவதும் முக்கியமானதாகும்.”

“ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக் கூடியவர்களை பாதுகாக்கும் அதே வேளையில் நிதி மற்றும் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கு இலட்சிய வருவாய் அடிப்படையிலான நிதி ஒருங்கிணைப்பு அவசியம். இது சம்பந்தமாக, தற்போதைய முற்போக்கான வரி சீர்திருத்தங்களின் வேகம் பராமரிக்கப்பட வேண்டும், மேலும் சமூக பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டும் மற்றும் ஏழைகளை இலக்காகக் கொள்ள வேண்டும். நிதி மாற்றங்கள் வெற்றிகரமாக இருக்க, வரி நிர்வாகம், பொது நிதி மற்றும் செலவு மேலாண்மை மற்றும் எரிசக்தி விலை நிர்ணயம் ஆகியவற்றில் நிலையான நிதி நிறுவன சீர்திருத்தங்கள் முக்கியமானவை.”

“முக்கியமான உத்தியோகபூர்வ இருதரப்பு கடனாளர்களிடமிருந்து குறிப்பிட்ட மற்றும் நம்பகமான நிதியளிப்பு உத்தரவாதங்களைப் பெற்றுள்ளதால், ஐ. எம். எவ். ஆதரவு திட்டத்துக்கு இணங்க கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதில் அதிகாரிகள் மற்றும் கடன் வழங்குநர்கள் விரைவான முன்னேற்றம் அடைவது இப்போது முக்கியமானது. திட்ட அளவுருக்கள் மற்றும் சரியான நேரத்தில் கடனாளர்களிடையே சமமான சுமை பகிர்வு ஆகியவற்றுடன் ஒத்துப்போகும், கடன் தீர்வை வெளிப் படையாக அடைவதற்கான அதிகாரிகளின் உறுதிப்பாடுகள் வரவேற்கத் தக்கது.”

“ஒரு நல்ல மற்றும் போதுமான மூலதனமயமாக்கப்பட்ட வங்கி முறையை பராமரிப்பது முக்கியம். வங்கி மறுமூலதனத் திட்டத்தைச் செயல்படுத்துதல் மற்றும் நிதி மேற்பார்வை மற்றும் நெருக்கடி மேலாண்மை கட்டமைப்பை வலுப்படுத்துதல் ஆகியவை நிதித்துறை ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முக்கியமானவை.”

ஊழலுக்கு எதிரான சட்டத்தை மறுசீரமைப்பது உட்பட ஊழலை சமாளிக்கும் முயற்சிகள் தொடர வேண்டும். இலங்கையின் ஊழல் எதிர்ப்பு மற்றும் நிர்வாக கட்டமைப்பின் மதிப்பீட்டை நடத்தும் தற்போதைய சர்வதேச நாணய நிதியத்தின் ஆளுகை கண்டறியும் பணியால் மிகவும் விரிவான ஊழல் எதிர்ப்பு சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் வழிநடத்தப்பட வேண்டும். வளர்ச்சி பங்காளிகளின் தொழில்நுட்ப உதவியுடன் வளர்ச்சியை மேம்படுத்தும் கட்டமைப்பு சீர்திருத்தங்களை முடுக்கிவிட வேண்டும்,” - என்றார் அவர்

## கடன்களின்...

டொலர்களை இலங்கைக்கு கிட்டுகிறது. இதன் மூலம், இலங்கை கடன் அளிப்பதற்கு தகுதியான நாடு என்ற தகுதியை பெற்றுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில், சர்வதேச நாணய நிதியப் பணிப்பாளர் சபையின் அனுமதியை அடுத்து 700 கோடி டொலர்களுக்கும் அதிகமான நிதியைப் பெறுவதற்கான வாய்ப்பு இலங்கைக்குக் கிட்டியிருப்பதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் உதவிச் செயல்திட்டத்தின் ஊடாக இலங்கையின் பொதுக் கடன்களின் நிலைத் தன்மையை உறுதிப்படுத்தப்படும் எனவும் மத்திய வங்கி நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

மேலும், தற்போது மனிதவள மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் முதலீடு செய்வதொன்றே தற்போது நாடு முகங்கொடுத்திருக்கும் நெருக்கடியிலிருந்து நிரந்தரமாக மீள்வதற்கும், நீண்டகால பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வதற்குமான வழிமுறையாகும் என் றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ஐ)

## அடம்பன்...

உயிலங்குளம் பிரதான வீதியில் அடம்பன் பகுதியில் நேற்று மாலை 5 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிலங்குளத்திலிருந்து அடம்பன் வரும் திசையில் இரு இளைஞர்கள் ஒரு மோட்டார் சைக்கிளிலும் அவர்களுக்கு நேர் எதிர்த் திசையில் முதியவர் ஒருவர் மோட்டார் சைக்கிளிலும் பயணித்த நிலையிலேயே நேருக்கு நேர் மோதி இந்த விபத்து இடம்பெற்றது.

இதில் இளைஞர்களில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றைய இளைஞரும் முதியவரும் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்தவர்கள் மன்னார் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அடம்பன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## தேசிய...

இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் சுமார் 300 கோடி டொலர் வழங்க நேற்று முன்தினம் இணங்கியது. இதனால், சர்வதேச நிதி அமைப்புகள் மற்றும் உலக நாடுகள் கடன் வசதிகளை வழங்குவதற்கு தகுதியான நாடு இலங்கை என்று ஐ. எம். எவ். அடையாளப்படுத்தியுள்ளது. இதனால், இலங்கைக்கு தொடர்ச்சியாக கடன்களை - கடன் உத்தரவாதங்களை சர்வதேச நிதி அமைப்புகள், உலக நாடுகள் இனி வழங்கும் நிலை உருவாகியுள்ளது.

இந்த நிலையிலேயே, நேற்று நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி இலங்கை இனி வங்குரோத்து அடைந்த நாடு அல்ல என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில், சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று புதன்கிழமை பாராளுமன்றில் சமர்ப்பித்து விசேட உரையாற்றவுள்ளார். இதன்போதே அவர் தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கான அழைப்பை விடுப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவரின் இந்த அழைப்பைத் தொடர்ந்து ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்த ராஜித, ஹர்ஷ டீ சில்வா மற்றும் ஏனைய கட்சிகளை சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் சிலர் தேசிய அரசாங்கத்தில் இணைவர் என்றும் அந்த வட்டாரங்கள் கூறின.

இதேவேளை, தேசிய அரசாங்கம் அமைந்ததும் விரிவாக்கத்துடன்கூடிய புதிய அமைச்சரவை அமையப்பெறும் என்றும் இதில், தேசிய அரசாங்கத்தில் இணையும் எதிர்க்கட்சியினரும் உள்வாங்கப்படுவர் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

# பொய் செய்திகளை சமூகமயமாக்கும் ஊடகங்களை கண்காணிக்க வேண்டும்

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

கொழும்பு, மார்ச் 22

ஊடகங்களை கண்காணிக்க வேண்டுமாயின் காலையில் பத்திரிகை செய்திகள் ஊடாக பொய்களை மாத்திரம் சமூகமயப்படுத்தும் ஊடகங்களையும் கண்காணிக்க வேண்டும். ஊடகங்களுடன் பிரச்னைகள் காணப்படுமாயின் அதனை பாராளுமன்றத்திற்குள் தீர்த்துக் கொள்ள வேண்டும். நீதிமன்றம் வரை செல்வது அவசியமற்றது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர்,

சியத்த ஊடக நிறுவனத்தின் டெலிவெகிய நிகழ்ச்சி தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கை பாரதூரமானது. நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் திட்டமிட்டு என்னை ஊடகங்கள் விமர்சித்து செய்திகளை வெளியிட்டன. தற்போது பாராளுமன்ற உறுப்பினராக உள்ள போதும் பொய்யான செய்திகள் பல வெளியாகுகின்றன.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் ஊடாக ஊடகங்களுக்கு முழுமையான சுதந்திரத்தை வழங்கினேன். அது எனக்கு எதிராக அமைந்தது. என்னை விமர்சித்த போதும் நான் நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் குறித்த நிகழ்ச்சி தொடர்பான விடயத்தை நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லாது பாராளுமன்றத்திற்குள் ஒரு தீர்வு எடுத்துக் கொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

## ஹஜ் யாத்திரை...

திறந்து வைக்கப்பட்டது என்று புத்தசாசன சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

ஹஜ் விவகாரங்களை கையாள பணிமனை ஒன்று நேற்று திறந்து வைக்கப்பட்டது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், எந்தவொரு மதத்திலும் பிரிவினைகள் போதிக்கப்படவில்லை. இவற்றை கடந்து நாம் பயணிக்க வேண்டும். அவர்களின் மதவாழிபாடுகளை முழுமையாக நிறைவேற்ற எம்மால் முடிந்தளவு ஒத்துழைப்புகளை வழங்க முன்வரவேண்டும்.

முஸ்லிம்கள் தங்களது மத வழிபாடுகளில் ஈடுபடும்போது பிரச்னைகள் எழுவதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இது தொடர்பில் ஆராய அரசாங்கம் முன்வந்துள்ளது - என்றும் கூறினார். (ஐ)

## வடமராட்சி...

லொறியும் குடத்தனை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளுமே நேரடியாக மோதி விபத்து ஏற்பட்டது.

விபத்தில் தந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். படுகாயமடைந்த மகள் பருத்தித்துறை மருத்துவமனையில் சேர்க் கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ஐ-02)

## இலங்கை...

தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று நாட்டு மக்களுக்கு விசேட உரை நிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டின் கடன்களை மறுசீரமைப்பதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. வங்குரோத்து அடைந்த நாடு என்ற நிலை இலங்கைக்கு இனி இருக்காது. கிடைக்கப்பெற்ற கடன் வசதி மூலம் நாட்டின் வழமையான கொடுக்கல் வாங்கல் செயல்பாடுகளை ஆரம்பிக்க முடியும். மேலும், நாட்டின் அந்நிய செலாவணி அதிகரிக்கும்போது, இறக்குமதி கட்டுப்பாடுகளை விரைவாக தளர்த்த முடியும்.

அத்தியாவசிய பொருட்கள், மருந்துகள், சுற்றுலாத்துறைக்கு தேவையான பொருட்கள் போன்றவற்றை இறக்குமதி செய்வதற்கான அனுமதி முதல்கட்டமாக வழங்கப்படும். சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டை எட்டுவதற்கு உதவிய அனைத்து நாடுகளுக்கும் ஐ. எம். எவ். மற்றும் உலக வங்கியின் உயர் அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி தனது உரையின் போது நன்றி தெரிவித்தார்.

அத்துடன், இந்த விடயம் தொடர்பான முழுமையான உரையை இன்று புதன்கிழமை பாராளுமன்றத்தில் ஆற்றுவார் என்றும் இதன்போது ஐ. எம். எவ்வுடனான ஒப்பந்தத்தை பாராளுமன்றுக்கு சமர்ப்பிப்பார் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ஐ)

## தமிழ்...

வலியுறுத்ஷதினார்.

அவுஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினரான லிடியா தோர்ப் நேற்று ஆற்றிய உரையில், இலங்கையில் நடந்த இனப்படுகொலையை அங்கீகரிப்பது அவசியம். அகதிகளுக்கு எதிரான அவர்களின் சித்திரவதை வடிவங்களையும், ஈழத் தமிழர்களுக்கு எதிரான இலங்கை இனப்படுகொலைக் குற்றங்களில் அவர்கள் மெத்தனமாக இருப்பதையும் ஒப்புக் கொள்ளுமாறு குடிவரவுத் துறைக்கு இதன்போது அழைப்பு விடுத்தார்.

முன்னதாக லிடியா தோர்ப் எம். பி., தமிழ் அகதிகள் பேரவையின் பிரதிநிதிகள் குழு கடந்த 6 ஆம் திகதி சந்தித்துப் பேசினார். இதன்போது தமிழ் அகதிகளின் கதைகளையும் அவர்களின் தனிப்பட்ட மற்றும் இலங்கையில் தமிழ் மக்கள் மீதான அரசாங்கம் - அரச படைகள் நிகழ்த்திய அழிவுகளையும் பகிர்ந்து கொண்டனர். இந்நிலையில், நேற்று அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தில் அவர் உரையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஒருவரின்...

இவ்வாறு காணாமல் போனவர்களாவர்.

இவர்கள் மொனராகலை - வெல்லவாய- எல்லாவல நீர்வீழ்ச்சிக்கு சுற்றுலாவாக சென்று குளித்தபோதே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

இந்த நீர்வீழ்ச்சியில் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் மூவர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். கடந்த ஐந்து வருடங்களுக்கு உள்ளாக 15 பேர் வரை இந்த நீர்வீழ்ச்சி பகுதியில் உயிரிழந்தனர் என்றும் உள்ளூர்வாசிகள் தெரிவித்தனர். (ஐ-01)

(முன்னர் வந்த செய்தி பக்கம் 14இல்)

## கிழக்கில்...

அவர் மேற்கண்டவாறு காட்டமாகக் கூறினார்.

மேலும், கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் காணிகளை அபகரிப்பதில் சிங்கள மக்களைவிட முஸ்லிம் மக்களும் அரசியல்வாதிகளுமே தீவிரமாக செயல்படுகின்றனர். வேலை வாய்ப்பில் தமிழ் மக்களின் வாய்ப்புகள் பறிக்கப்படுகின்றன. தமிழ் மக்களின் பூர்வீக நிலமான கல்முனையில் தமிழ் பிரதேச செயலகம் உருவாக விடாமல் தடை செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை தமிழரசு கட்சி முல்லைத்தீவு - கரைதுறைப்பற்றில் முஸ்லிம் கட்சியுடன் கூட்டணி வைத்துள்ளது. இதை நாம் வன்மையாக எதிர்க்கிறோம். முல்லைத்தீவில் உள்ளவர்களுக்கு அது புரியாமல் இருக்கலாம். ஆனால், அம்பாறையை பொறுத்தவரை தமிழ் மக்களுக்கு எதிரிகள் சிங்களவர்கள் அல்ல, முஸ்லிம்களே - என்றும் அவர் கூறினார்.

ஈழநாடு
Eelanadu

# இலங்கையில் தொடரும் மனித உரிமைகள் மீறல்

## அமெரிக்கா குற்றச்சாட்டு



வாஷிங்டன், மார்ச் 22

**இலங்கையில் கடந்த ஆண்டிலும் குறிப்பிடத்தக்க மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் குற்றம் சுமத்தியுள்ளது.**

மனித உரிமை நடைமுறைகள் தொடர்பான வருடாந்த அறிக்கையில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்ரனி பிளிங்கன் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

மனித உரிமை மீறல்கள் மற்றும் ஊழலில் ஈடுபடுபவர்களை அடையாளம் கண்டு விசாரணை செய்து அவர்களை தண்டிக்க அரசாங்கம் குறைந்தபட்ச நடவடிக்கைகளையே எடுத்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் கடந்த மே 9 அன்று கொழும்பில் அமைதியான போராட்டக்காரர்கள் மீது அப்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வன்முறைச் சம்பவத்தின் பின்னர் 3,300 இற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் 2,000 ற்கும் அதிகமானோர் பிணையில் விடுவிக்கப்பட்டதாகவும் அரசாங்கம் அறிவித்தது.

எவ்வாறாயினும் கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் என அன்ரனி பிளிங்கன் குறிப்பிட்டுள்ளார். (அ)

# அமெரிக்கா வரவேற்பு



கொழும்பு, மார்ச் 22

சர்வதேச நாணய நிதியம் வழங்கிய அனுமதிக்கு வரவேற்பு தெரிவித்துள்ள அமெரிக்கா, பொருளாதார மீட்சிக்கான பாதையின் ஒரு முக்கியமான படி இது வென்றும் குறிப்பிட்டுள்ளது.

ஆகவே சீர்திருத்தங்களைத் தொடரவேண்டும் என்றும் வேலைத்திட்டங்கள் மற்றும் பொருளாதாரம் பாதையை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு அனைவரும் பயன்பெறும் வகையில் சிறந்த நிர்வாகம் மற்றும் வெளிப்படைத்தன்மைக்கு தீர்வு காணும் கட்டமைப்பு மற்றும் நீடித்த சீர்திருத்தங்கள் முக்கியமானவை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# நாட்டைத் திவாலாக்கிவிட்டு இப்போது கடன் வாங்கிவிட்டோம் என தம்பட்டம்

## கிண்டலடிக்கின்றார் லக்ஷ்மன் கிரியெல்ல

கொழும்பு, மார்ச் 22

நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு சென்றுவிட்டு இப்போது கடன் வாங்கிவிட்டதாகத் தற்பெருமை பேசிப் பயனில்லை என எதிர்க்கட்சி உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாட்டி ன் கையிருப்பை பூச்சியமாக குறைத்த இந்த அரசாங்கம் அந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்காகவே கடனைப் பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பணத்தை வழங்குவதற்கான நிபந்தனைகள் என்னவென்று அவர்களுக்குத் தெரியாது என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல கூறினார்.



இதேநேரம் நாட்டின் நீதித்துறை, தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் ஊடகவியலாளர்களை பாராளுமன்ற சிறப்புரிமைகளை பயன்படுத்தி நசுக்கும் நட வடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

21 ஆவது திருத்தத்தின் மூலம் நீதித்துறை மற்றும் உயர் அதிகாரிகளின் சுதந்திரம் தற்போது பாராளுமன்ற சிறப்புரிமைகளை பயன்படுத்தி அழிக்கப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# மரண அறிவித்தல்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 04 - 03 - 1928 | 19 - 03 - 2023 |

## திருமதி பொன்னுத்துரை புவனேஸ்வரி

யாழ். மின்சாரநிலைய வீதியைப் பூர்வீகமாகவும், பிரான்ஸை கடந்த 40 வருடங்கள் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை புவனேஸ்வரி கடந்த 19.03.2023 ஞாயிற்றுக்கிழமை தனது 95ஆவது வயதில் காலமானார்.

அன்னார், யாழ். ரயில் நிலைய பகுதியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லையா – செல்லம்மா (சிறைக்காவலர்) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், செந்தில்நாதன் மற்றும் குணராசா, கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும்,மாவிட்டபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தப்பிள்ளை பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தனபாலசிங்கம், துவாரகாதேவி, ரதிதேவி, சிறிகாந்தசிங்கம் ஆகிய நால்வரின் அன்புத் தாயாரும், மேர்ளின் ரோஸ்மணி, காசிலிங்கம் (ஈழநாடு), தெய்வேந்திரம், தில்லைநாயகி ஆகியோரின் அன்பு மாமியாரும்,சுதேசபவன் (குமார்), கல்யாணி, ரோகிணி, காலஞ் சென்றவர்களான கிருஷ்ணபவன், கணேசபவன் மற்றும் முரளிஸ்வரபவன், சரத்பவன், ராகினி, கலைச்செல்வி, அருட்செல்வி, அரவிந்தன், முகுந்தன், சிவச்செல்வி, இந்திராதேவி, கஜேந்திரன், ரவீந்திரன், சிவேந்திரன், வசீகரன், சர்மிளா, கயானா ஆகிய இருபது(20) பேர்களின் அன்புப் பேர்த்தியும், சஹீரா, கதிர், அசோக், தர்மிலா, மிதுலா, நிசாலா, நதீஸ், பூமிகா, பூவிதன், பூர்த்திகன், ஜீவிதன், ஜோதிகா, தீபன், செந் தூரி, ஆரவிதன், ஆதிகன், யாழன், அஜனி, வைதீகன், இந்துஜா, ஜனகன், கீயான், கீர்த்தன், நிசாந், சியான், சனையா, சுருதி, சைனி, சஸ்வின், சச்சின், சாயகன், சாயிதன் ஆகிய முப்பத்து மூன்று(33) பேர்களின் அன்புப் பூட்டியும், அனுஷ்டன், காபின் ஆகிய இரண்டு பேர்களின் பாசமிகு கொள்ளுப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று (22.03.2023) புதன்கிழமை நண்பகல் 12.00 முதல் 4.00 மணியளவில் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**

# நாணய நிதியம் வழங்கியுள்ள அனுமதி மகிழ்ச்சியளிக்கிறது

## நன்றி கூறுகின்றார் ஜனாதிபதி



கொழும்பு, மார்ச் 22

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையினால் வழங்கப்பட்டுள்ள அனுமதி குறித்து மகிழ்ச்சி அடைவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த இக்கட்டான தருணத்தில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் நமது சர்வதேச பங்காளிகள் அளித்த ஆதரவுக்கும் அவர் நன்றி கூறியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இந்த உதவியினால் இலங்கையின் நிலையை மேம்படுத்துவதற்கும் சர்வதேச மூலதனச் சந்தைகளை அணுகுவதற்கும் இன்றியமையாததாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு முதலீட்டாளர்கள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் ஏனைய விடயங்களுக்கு ஏற்ற நாடு என்பதை இலங்கை மீண்டும் நிரூபிக்கும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (அ)

# நாணய நிதிய ஒப்பந்தங்கள் இன்று பாராளுமன்றத்தில்!

கொழும்பு, மார்ச் 22

சர்வதேச நாணய நிதியத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான ஒப்பந்தத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார் என ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதி தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று பாராளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை வெளியிடவுள்ளார். (அ)

# அடுத்த மாதம் எரிபொருள் விலைகள் குறைக்கப்படும்!

கொழும்பு, மார்ச் 22

அடுத்த மாதம் எரிபொருளுக்கும் டிசம்பரில் மின் கட்டணத்திற்கும் நிவாரணம் அளிக்கப்படும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் மீதான விவாதத்தில் அமைச்சர் இதனைக் கூறினார்.

மசகு எண்ணெய் விலை குறைந்து வருகிறது என்றும் ரூபாயின் மதிப்பும் வலுவடைந்து வருகிறது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே எரிபொருள் விலையில் நிவாரணம் வழங்குமாறு ஜனாதிபதி தனக்கு ஏற்கனவே பணிப்புரை விடுத்துள்ளார் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார். (அ)

# தேர்தல் செயல்பாடுகளில் தலையிடவே மாட்டோம்!

## சர்வதேச நாணய நிதியம் அறிவிப்பு



கொழும்பு, மார்ச் 22

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான செயற்பாடுகளில் தலையிட மாட்டோம் என சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

மேலும் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்தி வைக்க வேண்டும் என இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் ஒருபோதும் பரிந்துரை செய்யவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் மசாஹிரோ நோசாகி இதனைத் தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.03.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.